பக்கங்கள்:13 | விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 29 வியாழக்கிழமை 12.05.2022 கதிர் 188

### இனிது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகின்றார் என்ற செய்தி வெளியானதும் எனக்கு ஒரு சினிமாப் படம்தான் நினைவுக்கு வந்தது .

இந்தியாவில் பிரதமர் இந்திரா காந்தி அவசரகால நிலைமையைக் கொண்டு வந்து, இப்போதைய கோட்டா 2

# முதலில் புதிய அரசு அமைப்பு; பின் ‘19’ மீள அமுலாக்கம்
# ஜனாதிபதி முறைமை நீக்கம் குறித்துப் பிறகு பேசி முடிவு



## நேற்றிரவு மக்களுக்கு ஆற்றிய உரையில் கோட்டாபய தெரிவிப்பு

ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். புதிய அரசை ஸ்தாபித்து, நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்திய பின்னர், இது சம்பந்தமாக பேச்சு நடத்தி, நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் உரையில் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இவ்வாரத்துக்குள் புதிய அரசு ஸ்தாபிக்கப்படும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுள்ள – அதேபோல மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய – ஒருவரை பிரதமராக்கி, புதிய அமைச்சரவையை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்பின்னர் நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்கக்கூடிய 03

## ‘கோட்டா கோ கம’வினருக்கு ஊரடங்கு குறித்து எச்சரிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி தன்னெழுச்சியாக காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்களுக்கு ஊரடங்குச் சட்டத்தைப் பின்பற்றி நடக்குமாறு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பொலிஸாரால் ஒலிபெருக்கி மூலம் விசேட அறிவுறுத்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 6ஆம் திகதி நள்ளிரவு முதல் 03

# ரணில் இன்று பிரதமராகிறார்

## தனித்து ஓர் எம்.பியாகத் தெரிவாகி தலைமை அமைச்சராகும் அதிசயம்

கொழும்பு, மே 12

தமது கட்சியின் சார்பில் தனித்து ஏக எம்.பியாக – அதுவும் தேசியப் பட்டியல் மூலம் – நாடாளுமன்றம் சென்ற ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேறு தரப்புகளோடு கூட்டணி அமைக்காமலேயே பிரதமராகும் அதிசயம் இன்று நடைபெறுகிறது. 03



## கதிரவெளிக் கடலும் மூவரைப் பலி எடுத்தது

### அளம்பிலில் செவ்வாய்; வாகரையில் புதன்

மட்டக்களப்பு கதிரவெளி வாகரை கடலில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற மூவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர். கதிரவெளி புதூரைச் சேர்ந்த த.சதிஜன் வயது (26),கதிரவெளியைச் சேர்ந்த ஜீ.நிமல் ராஜ் வயது (22), பு.அனுராஜன் வயது (22) ஆகிய இளைஞர்களே நேற்று மதியவேளை கடலில் குளித்துக்கொண்டிருக்கும்போது இவ்வனர்த்தம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். ஊரடங்குச் சட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட நிலையில் தமது 03

## மூன்று அமைச்சுகளுக்கு செயலர்கள் மீள நியமனம்

பாதுகாப்பு அமைச்சு, பொதுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றுக்கு இதுவரை கடமையாற்றிய செயலாளர்கள் ஜனாதிபதியால் மீண்டும் நேற்று முன்தினம் 10ஆம் திகதி முதல் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 03

## சஜித் கட்சியிலிருந்து ஹரின் பல்டி ரணிலின் அரசில் இணைய ஆயத்தம்



நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாத்தியமான தீர்வை வழங்குவதற்குத் தவறியமையால் தான் நாடாளுமன்றத்தில் சுயேச்சையாகச் செயற்படவுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையும் புதிய அரசில் இணைவார் எனத் தெரிகின்றது. 03

## வன்முறையாளர்களைச் சுட பொலிஸுக்கும் அதிகாரம்

வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு நாட்டிலுள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிகபட்ச சட்டபூர்வ அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கட்டுக்கடங்காத 03

## மஹிந்தவைத் தவறாக வழி நடத்தியவர்களின் வீடுகள் தாக்கப்பட்டமை மகிழ்வுக்குரியதாம்!

### வண. அத்துரலிய ரத்ன தேரர் உபதேசம் இது

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தவறான முறையில் வழிநடத்தி நாட்டை சகல துறைகளிலும் நெருக்கடிக்குள்ளாக்கிய சில அமைச்சர்களின் வீடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்துள்ளமையையிட்டு தான் மகிழ்ச்சியடைகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 03

## இன்று காலை 7க்கு நீக்கப்படும் ஊரடங்கு மீள பி.ப.2 மணிக்கு!

நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தளர்த்தப்பட்டு மீண்டும் இன்று பிற்பகல் 2 மணிக்கு அமுல்படுத்தப்பட்டு நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும்.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட எழுத்துபூர்வ 2

## அத்தியாவசிய சேவைகளுக்கு ஆணையாளர் நாயகம் நியமனம்

நாட்டில் அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் தொடர்ந்து முன்னெடுத்தல் தொடர்பான சகல செயற்பாடுகளையும் அமுல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த கே.டி.எஸ்.ருவன்சந்திர 03

## மக்கள் குரலை செவிமடுங்கள்! புனித பாப்பரசர் வேண்டுகோள்

இலங்கை மக்கள் அமைதியான வழியில் தங்கள் குரல்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அரசியல் தலைவர்கள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் எனவும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற 03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அரசு போல, தமது ஆட்சி அதிகாரக் கெடுபிடிகளை மிகவும் மோசமாகக் கட்ட விழ்த்து விட்டார். அந்தச் சமயத்தில்தான் அந்தப் படம் வெளியானது. இந்திரா காந்தியின் எமர்ஜென்ஸி கால நடவடிக் கைகளை கிண்டலோடு மோசமாக விமர் சிக்கும் அந்தப் படத்தை எழுதி, தயாரித்து, இயக்கி, நடித்தவர் சோ. படத்தின் பெயர் 'முகமது பின் துக்ளக்'. புதைபொருள் ஆய்வாளர்கள் ஓர் இடத்தை தோண்டும் போது அங்கிருக்கின்ற ஒரு சமாதிக்குள் - கல்லறைக்குள் - இருந்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட்ட மன்னன் துக்ளக் தன் உதவியாளர் பதூ தாவுடன் சேர்ந்து எழுந்து வருவதாக ஒரு நாடகத்தை அரங்கேற்றி வெளியே வரு வார் சோ. பின்னர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து ஒரு தொகுதியில் போட்டியிட்டு துக்ளக் எனத் தன்னைப் பிரபலப் படுத்தி காட்டுவதன் மூலம் சுலப மாக வெற்றி பெறுவார். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் 350 எம்பிக்களைப் பேரம் பேசி தம் பக்கம் விலைக்கு வாங்கு வதன் மூலம் அவர் பிரதமராவார். அந்த அரசில் துக்ளக் பிரதமர். மிகுதி 350 பேரும்பிரதிப்பிரதமர்கள். அவர்களுடைய நையாண்டி அரசியல் அப்போதைய இந்திரா காந்தி அரசு அரசை மோசமாகக் கிண்டல் பண்ண, அதனால் சீற்றமுற்ற இந்திரா அரசு அந்தப் படத்தைத் தடை செய்தது.

அதே முகமது பின் துக்ளக் போல இப்போது தனித்து ஓர் எம்.பியாக நாடா ளுமன்றம் போய் பிரதமராகப் பதவி ஏற்கிறார் ரணில். மக்களால் நேரடித் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட ஒருவர் - தமது கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் ஒரேயொரு எம்.பியாக நாடாளுமன்றத் துக்குள் போய், வேறு எந்த ஒரு கட்சியோ டும் கூட்டுக் கூட அமைக்காமல், பிரத மராகி விடும் அதிசயம் இப்போது நடக் கின்றது.

எனக்கு என்னவோ கோட்டாபய, ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடம் கொடுத் தமை ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த கதையாக மாறிவிடும் போலதான் தோன்றுகிறது.

கோட்டாவின் மொட்டுக் கட்சி அவரை (ரணிலை) ஆதரிக்கும் என்று கூறப்பட் டாலும், மஹிந்த ராஜபக்ஷ தலைமையி லான ஓர் அணி ரணில் பிரதமராகும் அதே சமயம் மொட்டுத் தரப்பைப் பிய்த் துக் கொண்டு வெளியே வந்து, எதிரணி யில் அமர்வதற்கான ஆயத்தத்தை நேற் றிரவே ஆரம்பித்துவிட்டது என்பதை என் னால் உறுதி செய்ய முடிந்தது.

மஹிந்த ராஜபக்ஷவும், மொட்டு கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் ரணிலின் அரசில் இடம்பெற மாட்டார்கள், எதிரணியில் அமர்வார்கள் என்று கூறப் பட்டது.

அதே நேரத்தில் சஜித் தலைமை யிலான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பத்து எம்.பிக்கள் வரை பிரிந்து புதிய அரசில் சேரும் வாய்ப்புகள் உள்ளன. ஹரின் பெர்னாண்டோ மாத்திரமல்ல, மனுஷ நாணயக்கார, ஹர்ஷ டி சில்வா, இரான் விக்ரமரத்ன போன்ற பலர் ரணி லின் அரசுப் பக்கம் தாவி அமைச்சுப் பத விகளைக் கூட எடுக்கக் கூடும். இதனால் நலிந்து போகும் ஐக்கிய மக்கள் சக்தியிட மிருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மஹிந்த அணி இலகுவாகப் பிடுங்குவ தற்கும் வாய்ப்புண்டு.

உடனடியாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ தரப்புக் கோராவிட்டாலும் மஹிந்தவின் ஆதரவு, ஆசீர்வாதத்தோடு மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித்திடமிருந்து பறிக்கக் கூடும் எனத் தெரிகிறது.

தமது புதிய அமைச்சரவையில் மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் போன்றோரை வளைத்துப்

# தேசிய பிரச்சினையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மெய்நிகர் கட்சி கூட்டத்தை கோரும் ஜீவன் தொண்டமான்!

கொழும்பு, மே 12

இலங்கையின் தற்போதைய நிலை மையை நிவர்த்தி செய்வதற்கு மெய்நிகர் கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்று தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தனது டுவிட்டர் பதிவில், இந்த முன் மொழிவை வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பு என்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி பொது மக்களுக்கும் பாரிய பிரச்சினையாக உள்ளது.

எனவே, தீங்கு அல்லது அழிவு ஏற் படும் முன் நிலைமையை நிவர்த்தி செய்ய ஒரு மெய்நிகர் கட்சி தலைவர்கள் கூட்டம் தாமதமின்றி நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை ஜீவன் தொண்டமா னின் அழைப்பு, வரவேற்கத்தக்கது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்

ஏற்கனவே பாதுகாப்புக் காரணமாக சபாநாயகர் தலைமையில் நடைபெற விருந்த கட்சி தலைவர்களின் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்திருந்த நிலையிலேயே ஜீவன் தொண்டமானின் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

---

போடுவதற்கு ரணில் வீசிய வலையில் மூவரும் சிக்கவில்லை என்றும் தெரிகிறது.

ரணில் பிரதமராகுவதில் சுதந்திரக் கட்சித் தலைவர் மைத்திரிக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், ரணிலோடு சேர்ந்து அமைச்சர் பதவிகளை அவரது கட்சியி னர் ஏற்பர் எனத் தெரிகிறது. இது விட யத்தில் மைத்திரியை முட்டித் தள்ளிக் கொண்டு அரசுக்குள் இணைய அவரது சகாக்கள் தயார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மொட்டுக் கட்சி இப்போது தடுமாறிப் போய் இருக்கிறது. மாலுமி இல்லாத கப்பலாக அது ஈடாடுகின்றது. சந்தர்ப் பத்தைச் சரியாக பயன்படுத்துகிறார்கள் ரணில்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியை விட்டு விலகி, வீட்டுக்குப் போகு மாறு பொதுமக்கள் போராடி வருகையில், அவருக்கு முண்டு கொடுக்கும் விதத்தில் ரணில் எடுத்திருக்கும் முடிவு, பொதுமக் கள் மத்தியில் அல்லது போராட்டத்தை நடத்துவோர் மத்தியில் எத்தகைய சீற் றத்தை தரும் என்பது அடுத்து வரும் நாள்களில் வெளிப்படும் என எதிர்பார்க் கலாம்.

இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நேற்றுக் காலை திடீரென சீனத் தூதுவரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரில் சென்று சந்தித்து மந் திராலோசனை நடத்தினார். அதனால் களத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ரணிலுக்கு சாதகமான இந்தச் சூழலை விரைந்து ஏற்படுத்தின எனத் தெரிகிறது. சர்வதேச அரசியல் சூழலில் சீனாவுக்கு மாறான தரப்புகள் சஜித்துக்கு எதிரான நிலைப் பாட்டில் அவசர இராஜதந்திர நடவடிக்கை களை அடுத்து வந்த மணித்தியாலங்க ளில் வேகமாக மேற்கொண்டிருக்கலாம் என சில வட்டாரங்கள் தெரிவித்தன. அடுத்து வரும் நாள்களில் அவை பற்றிய ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்களை பெற லாம் என்று நம்புகிறேன். அப்போது அவை பற்றிய விவரங்களைத் தருவேன்.

இப்போது கட்டவிழும் இந்த அரசியல் மாற்றங்கள், திருப்பங்கள் உடனடியாக சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியைப் பலவீனப்படுத்துமாயினும், அது இனி விரைவில் வரக்கூடிய பொதுத் தேர்தலில் அக்கட்சிக்கு பலமாக மாறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது, எப்படி என்றாலும், தற்போதைய அரசியல் நெருக்கடிச் சூழலை முன்நி றுத்தி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பது, விரைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை வீட்டுக்கு அனுப்புவது ஆகி யவை தொடர்பில், நிபந்தனை விதித்து, நடவடிக்கைகள் எடுக்கக் கிடைத்த வாய்ப்பை, தம்முடைய அரசியல் பதவி மோகத்தினால் ரணில் குறுக்கிட்டு முறி யடித்து விட்டார் என்பது உண்மை.

ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ குழு வோடு ஒரு 'டீல்' போட்டுக்கொண்டு அவர் களின் நலனுக்காகச் செயல்பட்டு வருகி றார்கள் என சாணக்கியனும் மற்றவர் களும் கூறிவந்த குற்றச்சாட்டு இவ்வளவு விரைவில் நிரூபணமாகும் என்று யாரும் எதிர்பார்க்கத்தான் இல்லை.

– மின்னல் –

# மஹிந்தவை உடன் கைது செய்யுங்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மே 12

அமைதியானமுறையில் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டவர்கள் மீதான தாக்குதல் களில் சிறைக் கைதிகள் பயன்படுத்தப்பட் டனர் எனக் குற்றஞ்சாட்டி, சிறைச்சா லைகள் ஆணையாளரை உடனடியாக கைது செய்யுமாறு தொழிற்சங்க கூட்ட மைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் இணை அழைப் பாளர் ரவி குமுதேஷ் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

மைனகோகம மற்றும் கோட்டகோகம மீது தாக்குதல் நடத்துவதற்காக வத்த ரேகா சிறைச்சாலையிலிருந்தும் கைதி கள் களமிறக்கப்பட்டதாக கூறப்பட்டதைத் தொடர்ந்து, சிறைச்சாலைகள் ஆணை யாளரை உடனடியாகக் கைது செய்யு மாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன் பாக ஒன்றிணைந்த அடையாளப் போராட்டத்தை நடத்தியதுடன், அதனைத் தொடர்ந்து அவர்கள் கோட்டகோகம விற்கு ஆதரவாக காலி முகத்திடலுக்கு பேரணியாகச் சென்றனர்.

நிராயுதபாணியான போராட்டக் காரர் கள்மீதுதாக்குதல்நடத்ததூண்டியதற்காக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவை கைது செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசால் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அப்பாவி மக்களை ஏமாற் றும் உள்ளூர் அரசாங்க அரசியல்வாதி களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்ப டுத்தப்பட வேண்டும்.

பொது நிதியில் பராமரிக்கப்படும் செய லிழந்த உள்ளூராட்சி மன்றங்கள், அந்த மக்களுக்கு அடியை மட்டுமே கொடுக்கும் வகையில் செயற்படாமல் இருக்க வேண் டும் என்றும் நாங்கள் கோருகிறோம், - என்று அவர் வலியுறுத்தினார்.

# பாதுகாப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவும் இங்குள்ள சீன பிஜைகளுக்கு அந்நாடு அறிவுறுத்து

கொழும்பு, மே 12

இலங்கையில் ஏற்பட்ட வன்முறைத் திருப்பங்களை தாம் 'நெருக்கமாகப் பின்தொடர்வதாக' சீனா தெரிவித்துள் ளது.

எனவே இலங்கையில் பணிபுரியும் சீனப் பிரஜைகளை எச்சரிக்கையாகவும் ஆபத்துக்களுக்கு எதிராக பாதுகாப்பாக வும் இருக்குமாறு சீனா கேட்டுக் கொண் டுள்ளது.

பெய்ஜிங், இலங்கையில் வேகமாக வெளிவரும் நிகழ்வுகளை எச்சரிக்கை யுடன் பார்த்துக்கொண்டிருக்கும் நிலை யில், சீனா கையகப்படுத்திய தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டை துறை முகம் உட்பட, பெரிய அளவிலான சீன முதலீடுகளுக்கு வழி வகுத்த மஹிந்த ராஜபக்ஷவின் இராஜினாமா தொடர்பாக இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் சீன முதலீடுகளை ஊக்குவித்த ராஜபக்ஷவின் இராஜி னாமா சீனாவுக்கு பின்னடைவாகக் கருதப்படுகிறது.

## இன்று காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அனுமதி இன்றி அந்தப் பகுதிகளில் உள்ள பொது வீதிகள், ரயில் பாதைகள், பொதுப் பூங்காக்கள், பொது விளை யாட்டு மைதானம் அல்லது கடற்கரைக ளில் யாரும் தங்குவதற்கு அனுமதி இல்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



POST YOUR AD
yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

## 'கோட்டா கோ கம'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாட்டில் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல மே மாதம் 9ஆம் திகதி முதல் நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தக் காலப்பகுதியில் பொதுமக்கள் பொது இடங்களில் தரித்து இருப்பது மற்றும் ஒன்று கூடுவது தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறு இடம்பெறுமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் போராட்டக்காரர்கள் தாம் கலைந்து செல்லப் போவதில்லை என்றும், தாம் இங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரங்களுக்குச் சென்று அமைதியான முறையில் போராட உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

---

## முதலில் புதிய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வகையில் '19' ஐ மீள அமுலாக்கும் வகையில் அரசமைப்பு மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை முன்வைத்துள்ளனர். புதிய அரசு, நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திய பின்னர், அந்தக் கோரிக்கை தொடர்பில் பேச்சு நடத்தி, தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், அரச நிர்வாக பொறிமுறையை செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு தாருங்கள். – என்றார் ஜனாதிபதி.

---

## ரணில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தற்போதும் கொழும்பு அரசியலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை சாணக்கியமாகப் பயன்படுத்தி காய்களை நகர்த்திய அவர் அதன் மூலம் பிரதமர் பதவியை இன்று ஏற்கும் வாய்ப்பை சுவீகரித்துக் கொண்டார் எனத் தெரியவருகிறது.

தாம் இன்று பிரதமராகப் பதவியேற்கும் விவரங்களை பிற கட்சித் தலைவர்களுக்கு நேற்று அவரே உறுதிப்படுத்தினார் என அறிய வந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்திய ரணில் விக்கிரமசிங்க அதனை அடுத்து ஏனைய கட்சிகளின் தலைவர்களுடனும் பிரமுகர்களுடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார். தாம் இன்று பிரதமராகப் பதவி ஏற்கின்றார் என்ற செய்தியை அப்போது அவர்களுக்கு ரணில் தெரியப்படுத்தினார். பல தலைவர்களையும் தொடர்பு கொண்டு அவர் ஆதரவு கோரினார் எனவும் தெரிகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர், அதிலிருந்து வெளியேறி இப்போது சுயாதீனமாக செயற்படும் குழுவினர், சுதந்திரக் கட்சியினர் எனப் பழைய மொட்டு கட்சி அரசின் உறுப்பினர்கள் அனைவரும் ரணிலின் அரசில் இணைய இணக்கம் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதனால் அவரது அரசம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறும் வாய்ப்புத் தாராளமாக இருப்பதாகத் தெரிகின்றது.

இதே நேரம் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தரப்பிலிருந்தும் பல எம்.பிக்கள் குத்துக்கரணம் அடித்துரணிலின் அரசில் இணைவார்கள் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் இன்று ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே பிரதமராகப் பதவி ஏற்பார். பின்னர் ஜனாதிபதியோடு அவர் கலந்தாலோசனை செய்து அமைச்சர்கள் பட்டியலைத் தயாரிப்பார். அதன் பின்னர் அமைச்சர்கள் பதவி ஏற்பு அதனை அடுத்து வரும் நாள்களில் இடம்பெறும் எனக் கூறப்பட்டது

## மூன்று அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக மக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்காக நேற்று (நேற்று முன்தினம்) முதல் ஜனாதிபதியினால் இவர்கள் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், கே.எம்.மஹிந்த சிறிவர்த்தன நிதி அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை பொதுச் சொத்துக்களைச் சூறையாடுபவர்கள் அல்லது பிறருக்குத் தீங்கு விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முப்படைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டிருந்தது. பிரதமர் இராஜினாமா செய்தமையை அடுத்து அமைச்சரவை கலைக்கப்பட்டமையால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் முப்படைக்கும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு வழங்கப்பட்ட உத்தரவு சட்டவிரோதமானது என அரசமைப்பின் ஏற்பாடுகளைச் சுட்டிக்காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கதிரவெளிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொழுதைக் கழிப்பதற்காக 5 பேர் கொண்ட நண்பர்கள் கதிரவெளி கடற்கரைக்கு சென்று இளநீர் குடித்துவிட்டு பின்னர் கடலில் குளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களின் சடலங்களை மீனவர்கள் மற்றும் சுழியோடிகளின் உதவியுடன் மீட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் கதிரவெளி பிரதேசம் சோகத்தில் உள்ளது.

வங்கக் கடலில் தற்போது ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக கடல் அலையில் உயரமும் வேகமும் அதிகமாகவுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முதல் மட்டக்களப்பில் தாழமுக்கம் காரணமாக கடல் அலை வழமைக்கு மாறாக முன் நோக்கி வந்துள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லலாமல் தங்களது உடமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை முல்லைத் தீவு அளம்பில் செம்மலை கடலில் நேற்று முன்தினம் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவர் கடலில் மூழ்கி உயிரிழந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கடற்கரையில் நேற்று முன்தி மாலை 4 இளைஞர்கள் குளித்துக் கொண்டிருந்த நிலையில், இரு இளைஞர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயுள்ளனர். அது பற்றிய செய்தி விவரம் ஐந்தாம் பக்கத்தில் உள்ளது.

---

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாகவும் விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளரான ரோஹன புஷ்பகுமார மற்றும் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோர் மேலதிக ஆணையாளர்களாகவும் நேற்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன் ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக 25 மாவட்டங்களையும் சேர்ந்த மாவட்டச் செயலாளர்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சஜித் கட்சியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நாள் முழுவதும் கலந்துரையாடல்களை நடத்தினர். ஆனால் தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான சாத்தியமான தீர்வுகள் எட்டப்படவில்லை. சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படாதமையால் சஜித் பிரதமர் பதவியை மறுத்துவிட்டார்.

நிபந்தனைகளை முன்வைப்பதற்கான நேரம் இதுவல்ல என்று நான் சஜித்திடம் கூறினேன். நாம் முதலில் நாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அரசியல் ஸ்திரத்தன்மையை எவ்வாறு அடைவது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். சஜித் பிரதமர் பதவியை ஏற்றிருக்க வேண்டும். பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து இயல்பு நிலையை ஏற்படுத்தியதன் பின்னர் நிலைமைகளை உருவாக்க வேண்டும். எனினும் அவர் அதைச் செய்யத் தவறிவிட்டார்.

மக்களுக்கான தீர்வை முதலில் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் புதிதாக அமையும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கவுள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தியில் பிளவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. நான் தனியாக இல்லை. என்னுடன் மேலும் பலர் உள்ளனர். நாடாளுமன்றத்தில் வாக்களிப்பு நடைபெறும் போது இந்த எண்ணிக்கையைப் பார்க்கலாம். – என்றும் ஹரின் பெர்னாண்டோ மேலும் கூறினார்.

---

## வன்முறையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கும்பல் அல்லது வன்முறைக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் வாகன சோதனைகள் மற்றும் பொது அல்லது தனியார் சொத்துக்களை சேதப்படுத்துதல், கொள்ளையடித்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதே வேளை பொதுச் சொத்துக்களைச் சூறையாடுபவர்கள் அல்லது பிறருக்குத் தீங்கு விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்துவதற்கு முப்படைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சினால் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டிருந்தது.

---

## மக்கள் குரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வன்முறைகள் தொடர்பில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

சமீபத்திய காலங்களில் நாட்டின் சமூக, பொருளாதார சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, அமைதியான முறையில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் இளைஞர்களுக்கு எனது வாழ்த்துக்கள். வன்முறைக்கு அடிபணியாமல் அமைதியான அணுகுமுறையைப் பேணுமாறு அனைத்துத் தரப்பினரையும் வலியுறுத்துவதில் நான் மத அதிகாரிகளுடன் இணைந்து கொள்கிறேன்.

எதிர்ப்பாளர்களின் குரல்களுக்கு செவிசாய்க்குமாறு இலங்கையின் ஆளும் அரசியல் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்கவும் மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைகளுக்கு முழு மரியாதையை உறுதிப்படுத்தவும் பொறுப்புக்கள் உள்ள அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.– என்றார்.

---

## மஹிந்தவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இளைஞர்களின் அமைதி வழிப் போராட்டம் தவறான திசையை நோக்கிச் செல்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம உட்பட பொதுஜன பெரமுனவின் ஒரு சில சிறந்த அமைச்சர்களின் வீடுகளுக்குத் தாக்குதல் நடத்தியுள்ளமை கடுமையாகக் கண்டித்தக்கது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரண்டு வாரங்களுக்கு முன்னரே பதவி விலகும் தீர்மானத்தை எடுத்து விட்டார். எனினும் அவரது பதவியையும் அவர் நாட்டுக்கு ஆற்றிய சேவையையும் முன்னிலைப்படுத்தி மக்களால் வெறுக்கப்பட்ட ஒரு சில தரப்பினர் அவர் பதவி விலகுவதற்கு இடமளிக்கவில்லை.

காலிமுகத்திடல் அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பல்லாயிரக்கணக்கானோர் கடந்த திங்கட்கிழமை அலரி மாளிகைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். அலரிமாளிகையில் போராட்டக்காரர்களின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளும் அளவிற்கு வன்மம் தூண்டி விடப்பட்டுள்ளது.

அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது பொதுஜன பெரமுனவின் குண்டர்கள் மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டு வன்முறையை ஆரம்பித்து வைத்துள்ளார்கள். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு ஆற்றிய சேவைகள் அனைத்தும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. மிலேச்சத்தனமான தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து நாட்டில் நிலவும் அமைதியற்ற நிலைமைக்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும்.

காலிமுகத்திடல் அமைதி வழிப் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலின் பின்னணியில் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்த்தன, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ ஆகியோர் இருந்துள்ளனர். எனவே இவர்கள் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

மக்கள் ஆணைக்கு முரணாகச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கு நீதிமன்றக் கட்டமைப்பு ஊடாகவே தண்டனை வழங்க வேண்டும். அரசியல்வாதிகளின் வீடுகளுக்குத் தீ வைப்பதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அனைவரும் காலிமுகத்திடல் விவகாரத்துடன் தொடர்புபடவில்லை. மக்களால் வெறுக்கப்பட்ட நிலையில் இருந்தவர்கள் தான் கீழ்த்தரமான முறையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை தவறான வழியில் வழிநடாத்தி நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கிய ஒரு சில அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்துள்ளமை மகிழ்வுக்குரியது.

பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான முன்னாள் அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களை ஆரம்பத்திலிருந்து கடுமையாக எதிர்த்தார்கள். அவர்களின் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம 2019ஆம் ஆண்டு காலத்திலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்துள்ளார். அவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. காலிமுகத்திடல் அமைதிப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிலரது ஜனநாயகப் போராட்டம் தவறான திசையை நோக்கிச் செல்கின்றமை ஆபத்தானது.– என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணிலின் 'டீல்'!

'வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைப்பது' என்பார்கள். அது போன்ற கைங்கரியத்தை ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கின்றார்.

நாடு இப்போது நெருக்கடியான நிலையில் சிக்கி இருக்கின்றது என்பது உண்மை. பிரதமர் ஒருவர் ராஜினாமாச் செய்து மூன்று நாள்களாகி விட்டன. நாட்டில் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. இச்சமயத்தில் நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் அரசு அவசியம். மேலும் நெருக்கடிகளைக் கையாள்வதற்குத் தேவையான அவசரகால நிலை நாடாளுமன்றத்தில் அடுத்த சில தினங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் நாட்டின் மோசமான பொருளாதார நிலையை மேலும் பின்னடைவுகளைத் தராமல் சமாளிப்பதற்கு – அவற்றை எதிர்கொள்வதற்கும் நிமிர்த்துவதற்கும் – ஒரு நிலையான – ஸ்திரமான – அரசு விரைந்து அவசியம்.

ஆனால், இவற்றை எல்லாம் தாண்டி, நாட்டின் கடந்த சில கால பின்னடைவுகளில் இருந்து மீண்டெழுந்து, ஒரு புதிய சகாப்தத்தைப் படைப்பதற்கான புதிய பாதையை வகுத்து, ஒரு புதிய எழுச்சி – புதிய அரசியல் முறைமையை – தீர்மானிப்பதற்கான மிகப் பொருத்தமான அரசியல் சந்தர்ப்பமும் இதுதான்.

தன்னுடைய பதவியாசையை எட்டுவதற்காக அந்த அரிய வாய்ப்பைத் தகர்த்து, நாட்டு மக்களின் தற்போதைய எழுச்சிச் சிந்தனைகளுக்கு மாறாக, ரணில் விக்கிரமசிங்க, குறுக்குத்தனமாகப் புகுந்து, சின்னத்தனமாக நடந்து கொள்கின்றார்.

ராஜபக்ஷக்களின் அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்காக முழு நாடுமே ஒன்றுபட்டு கிளர்ந்திருக்கின்றது. அதனால் எழுந்த மக்களின் அரசில் புரட்சியால் அமைச்சர்களாக இருந்த ராஜபக்ஷக்கள் முதலில் தூக்கிக் கடாசப்பட்டார்கள். அதன் பின்னும் மக்கள் அடங்கவில்லை. வீறு கொண்டு நின்றார்கள். அதனால் பிரதமர் ராஜபக்ஷ பதவியை விட்டும், மக்கள் மத்தியில் தலைகாட்ட முடியாமலும் ஓடி ஒளிய வேண்டியவரானார்.

மக்களின் அடுத்த இலக்கு – ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதாக இருக்கிறது.

பிரதமர் பதவி விலகி, அரசு அமைக்க முடியாத இந்த நெருக்கடி சமயத்தில்தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்தில் இருந்து அகற்றுவது மற்றும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையையே ஒழிப்பது போன்ற விடயங்களை நிபந்தனைகளாக விதித்து, நாட்டின் எதிர்காலத்துக்கு நீதியான ஒரு திட்டத்தை வகுப்பதற்கான அரிய வாய்ப்பு ஏற்பட்டது.

பதவிகளைக் கைப்பற்றும் குறுகிய நோக்குக்கான வாய்ப்பாக அதனைப் பார்க்காமல், நாட்டின் எதிர்காலத்துக்கான ஒரு வழிமுறையை ஏற்படுத்தும் சந்தர்ப்பமாக அதனைப் பயன்படுத்தி, அதற்கான பேரத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முனைப்பாக இருந்த போது – வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைக்கும் கைங்கரியத்தை இடையில் புகுந்து பண்ணுகின்றார் ரணில்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புதல் போன்ற விடயங்களில் ஒரு தெளிவான – உறுதியான – முடிவை எட்டாமல், அப்படி முடிவு எட்டக் கூடிய அரிய வாய்ப்பை முறியடிக்க வைத்து, இடையில் புகுந்து ரணில் பிரதமராவது என்பது அவருக்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையில் 'டீல்' இருக்கின்றது என சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சாணக்கியன் கூறிய குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் என்பதுதான் உண்மை.

# இலங்கையில் அமைதி நிலவுவதற்கு மணல் சிற்பக் கலைஞரின் முயற்சி!




இந்தியாவின் பிரபல மணல் சிற்பக் கலைஞரான சுதர்சன் பட்நாயக் என்பவர் இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தி மணலில் ஓவியம் ஒன்றை செதுக்கியுள்ளார்.

குறித்த மணல் ஓவியம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறித்த மணல் சிற்பதை சுதர்சன் பட்நாயக் இந்தியாவின் பூரி கடற்கரை பகுதியில் செதுக்கியுள்ளார்.

# பிரபாகரத் தமிழனின் பேராண்மை எங்கே? நாடுகடக்க துடிக்கும் ராஜபக்ஷ எங்கே?

## வைரமுத்து நெகிழ்ச்சி

சர்வதேச ரீதியில் இன்று இலங்கை பேசுபொருளாக மாறியுள்ளது.

மக்கள் புரட்சியும், அரசியல் குழப்பமும் இலங்கை பற்றிய செய்தியை உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றிருக்கின்றது.

அதேசமயம், கடந்த 2009 ஆம் ஆண்டு இதே மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் கோரத்தையும் உலகம் இன்று நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றது.

அதை அறிந்த உலகத்தார் இலங்கை ஆட்சியாளர்களை வசை பாடாமல் தவிர்த்தால் தான் ஆச்சர்யம்.

இது இவ்வாறு இருக்க இந்திய சினிமாவில் மிகப்பெரிய கவிஞரான கவிப்பேரரசு வைரமுத்து தற்போதைய இலங்கை பிரச்சினை தொடர்பில் அவரது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். அதில்,

நான்கு பக்கம் மரணம் சூழ்ந்தபோதும் 'தாயகம் பிரியேன் தாய்மண்ணில் மாய்வேன்' என்ற பிரபாகரத் தமிழனின் பேராண்மை எங்கே...

ஊர் கொந்தளித்த ஒரே மாதத்தில் நாடு கடக்கத் துடிக்கும் ராஜபக்ஷ எங்கே...

ஓ சர்வதேச சமூகமே! இப்போதேனும் தமிழன் வீரத்திற்குத் தலைவணங்கு

என குறிப்பிடப்பட்டுள்ளது.

# போலி தமிழ்த் தேசியவாதிகளை தோற்கடிக்க சபதம் எடுப்போம்!

## சுகாஷ் கோரிக்கை



'நாட்டின் இந்த நிலைமைக்கும் தமிழ்த் தேசத்தின் அவலத்திற்கும் அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் மற்றும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்குள் மறைந்திருந்து அரச நிகழ்ச்சி நிரலைக் கனகச்சிதமாக நகர்த்துபவர்களும் காரணமென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை' என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர் தாயகத்தில் அவர்களைத் தாக்குவதையோ அல்லது அவர்களது அலுவலகங்களுக்குத் தீ வைப்பதையோ ஜனநாயக அரசியலில் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்களுக்கான சரியான தண்டனை அடுத்த பொதுத் தேர்தலில் இவர்களுக்கு வாக்களிக்காது முற்றாகப் புறக்கணித்து இவர்களை அரசியல் அநாதைகளாக்குவதே, சிங்கள தேசத்தின் பொருளாதார மோதலில் தமிழ்த் தேசம் சிக்குப்படாது அமைதியாக இருப்பதே உசிதமானது.

தமிழர் தாயகத்திலிருந்து சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவளித்த மக்களில் ஒருசாராருக்குத் திருந்துவதற்குச் சந்தர்ப்பமொன்றை வழங்கி அவர்களையும் தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் கருத்து உருவாக்கத்தை முன்னெடுப்பதே தமிழினத்தின் தேச விடுதலைக்கு வழிவகுக்கும், வலு சேர்க்கும் என்று உறுதியாக நம்புகின்றோம்.


கடந்த காலத்தில் தமிழ்த்தேசியத்திற்கு ஊறு விளைவித்து சிங்களத்தின் நிகழ்ச்சி நிரலைத் திட்டமிட்டு முன்னெடுத்த அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் மற்றும் போலித் தமிழ்த் தேசியவாதிகள் போன்றோரை எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகத் தோற்கடித்து தமிழ்த் தேச விடுதலைக்கு வலுசேர்க்க அனைவரும் சபதமெடுப்போம்.

அரசியல் தீர்வற்ற அபிவிருத்தியென்பது வெறும் மாயை என்பதை உணர்ந்து விடுதலை நோக்கிய பாதையில் விசுவாசமாகப் பயணிப்போமாக. – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கடலில் நீராடச் சென்ற இரு மாணவர்கள் மாயம்!

## ஒருவர் மீட்பு





அம்பாறை – பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள கடற்கரைப்பகுதியில் மூன்று பாடசாலை மாணவர்கள் கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு மாயமானதுடன், அதில் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

17 முதல் 18 வயது வரை வயது மதிக் கத்தக்க மாணவர்களே இவ்வாறு இவ்வனர்த் தத்தில் சிக்கியுள்ளனர்.

கடல் வழமைக்கு மாறாக கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில், அதனையும் பொருட்படுத்தாது நீச்சலில் ஈடுபட்டுள்ளனர்.

வழமை போன்று குறித்த கடற்கரைப்பகுதியில் விளையாடிய பின்னர் இவர்கள் மூவரும் குளிப்பதற்காக அப்பகுதிக்கு சென்ற நிலையில், இவ்வாறு கடலில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் மீட்கப்பட்டதுடன், ஏனைய இருவரை தேடும் பணியில் கடற்படையினர், கடற்தொழிலாளர்கள் மற்றும் உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் மூவரில் ஒருவரை அலை இழுத்து சென்ற நிலையில், அவரை காப்பாற்றும் முயற்சியில் ஏனைய இரு நண்பர்களும் ஈடுபட்டபோது அவர்களும் அலையில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

தற்போது மீட்கப்பட்டவர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவத்தை அடுத்து பெருமளவான மக்கள் கடற்கரை பகுதியில் குவிந்துள்ளதோடு, தாழமுக்கம் காரணமாக கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் தேடுதல் முயற்சிகள் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கிளிநொச்சி எனது அலுவலகம் தாக்கப்பட்டது என வதந்தி பரப்புவோர் மீது சட்ட நடவடிக்கை!

## சந்திரகுமார் தெரிவிப்பு



கிளிநொச்சியில் உள்ள தனது அலுவலகம் மற்றும் வாகனம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பி வருவதோடு, அவதூறுகளையும் சிலர் மேற்கொண்டு வருகின்றனர் எனவும், எனவே இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளளேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக அரசியல் மற்றும் மக்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றேன். எனது செயற்பாடுகள் எப்படியானவை என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். ஆனாலும் சில விசமிகள் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மக்கள் மத்தியில் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பி வருவதோடு, என் தொடர்பில் அவதூறு கருத்துக்களை வெளியிட்டும் வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை, இவ்வாறானவர்கள் தொடர்பில் விரைந்து சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன். தற்போது அரசியல் அதிகாரத்துக்கு இல்லை என்றாலும் கிளிநொச்சியில் எமக்கான மக்கள் ஆதரவு கடந்த காலத்தை விட அதிகரித்து வருகிறது.

தனியொரு தரப்பாக நின்று மக்களுக்கான எமது பணியை மேற்கொண்டு வருகின்றோம். அவசரக்கால சட்டம் உள்ளிட்ட மக்களைப் பாதிக்கின்ற நடவடிக்கைகளையும், மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் எதிர்த்தும், கண்டித்தும் வந்திருக்கின்றோம்.

இதனை அண்மைய எமது ஊடக அறிக்கைகளில் காணலாம். ஆனால் இதனையெல்லாம் அறிந்தும் தங்களுடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகச் சிலர் மக்களைக் குழப்பி வருகின்றனர். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# மஹிந்தவின் இல்லத்தை எரித்தவர்கள் இரக்கத்துக்கு தகுதியானவர்கள் அல்லர்!

## சுப்ரமணியன் சுவாமி ஆவேசம்



எமது அயல்நாடு மற்றுமொரு லிபியாவாக மாறுவதற்கு அனுமதிக்க முடியாது என இந்தியாவின் முன்னாள் அமைச்சர் சுப்ரமணியம் சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். அந்த பதிவில் மேலும் –

பிரதமரின் இல்லம் கூட எரிக்கப்படுகின்றது என்றால், அதற்குக் காரணமானவர்கள் இரக்கம் காண்பிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் அல்லர்.

எமது அயல்நாடு மற்றுமொரு லிபியாவாக மாறுவதற்கு அனுமதிக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி வைத்து அரசியல் அமைப்பின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய வேண்டுமென அவர் அண் மையில் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தார்.

அத்துடன் சுப்ரமணியம் சுவாமி தொடர்ச்சியாக ராஜபக்ஷர்களுடன் அதிலும் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவுடன் நட்பு ரீதியான உறவை முன்னெடுத்து வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது.

# காரைதீவில் திடீரென கடல் பெருக்கெடுப்பு



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவில் திடீரென நேற்று முன்தினம் மாலை கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் கடல் நீர் பெருக்கெடுத்து கரை யிலிருந்த தோணிகளை பந்தாடி யது. மீனவர்கள் உஷாராக செயற் பட்டு தோணிகளை நீண்டதூரம் கரைக்கு கொண்டுவந்து வைத்தனர்.

கடல்நீரும்பெருக்கெடுத்ததால் கரையிலிருந்த பள்ளத்திற்குள் நீர் நிறைந்தது. அதற்குள் தோணிகளை ஓட்டி சிறுவர்கள் மக்கள் குதூகலித்தனர்.

இதேவேளை கடற்கொந்தளிப்பால் மீனவர்கள் கடலுக்குச்செல்லவில்லை. ஆழ்கடல் மீன்பிடியோ கரைவலை மீன்பிடியோ எதுவுமே இடம்பெறவில்லை. அதனால் நேற்று பகல் மீனுக்கு தட்டுப்பாடு நிலவியது.

# அமைதிவழி போராட்டத்தின் மீது காட்டுமிராண்டிதனத் தாக்குதல்!

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கண்டனம்

அமைதிவழிப் போராட்டத்தின் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை கண்டிக்கின்றோம் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கைத் தீவில் எழுந்த அரசியல் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அதற்குத் தீர்வு வேண்டி கடந்த ஒருமாத காலமாக காலிமுகத்திடலில் இடம்பெற்றுவந்த கட்சி சார்பற்ற அமைதிவழிப்போராட்டத்தின்மீதுதிங்கட்கிழமை காடையர்களை திட்டமிட்ட ரீதியில் ஏவி நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதலை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு ஆகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழர்களாகிய நாங்கள் இவ்வாறான நிலைமைகளைக் கடந்த பல தசாப்தங்களாக எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் உங்கள் வலிகளை நாங்கள் புரிந்து கொள்கின்றோம்.

வன்முறை மற்றும் ஒடுக்கு முறை சார்ந்து, பிரச்சினைகளைத் தீர்க்க முனையும் அபாயகரமான முறைமையை இல்லாது செய்ய அனைத்து முற்போக்கு சக்திகளும் முன்வர வேண்டும் என கோரி நிற்கின்றோம். – இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தற்சார்பு பொருளாதார முறையே அழிவிலிருந்து எம்மைக் காக்கும்!



## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. அறிவுரை

யுத்தகாலத்தில் எமது மக்கள் தம்மைத்தாமே நம்பி தற்சார்பு பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தார்கள். எந்தத் தேவைக்கும் தென்னிலங்கையை நம்பி அவர்கள் வாழவில்லை. மாறாக, மேலதிக விளைச்சல்களால் கிடைப்பவற்றை தென்னிலங்கைக்கும் ஏற்றுமதி செய்தார்கள். தற்போதும் அந்த நிலைமையை நாம் ஏற்படுத்த வேண்டும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அவரது வாராந்த கேள்வி பதில் விளக்கத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கேள்வி : தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமையை எவ்வாறு காண்கின்றீர்கள்? அடுத்தென்ன செய்ய வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?

பதில் :– பல நாள்கள்வர்கள் ஒரு நாள் பிடிபடுவார்கள்' என்பதற்கு உதாரணமாக இன்றைய காலகட்டம் அமைந்துள்ளது. இது தெற்கில் மட்டும் நடந்துவந்துள்ளது என்று நாங்கள் நினைக்கக்கூடாது. போருக்குப் பின்னர் எமது அரசியல்வாதிகள் பலர், அரசாங்க அலுவலர்கள் பலர் 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்று விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரையைத் தமக்குக் கூறப்பட்டதாக எண்ணிக் கொண்டு கிடைத்ததைச் சுருட்டி வந்துள்ளனர். இவர்கள் பலரின் அரசியல் தலைவர்களாக தெற்கின் அரசியல் தலைவர்கள் இருந்தார்கள். அவர்களின் தலைவர்களுக்கு இன்று நடப்பவற்றை எம்மவர்கள் அவதானித்து தம்மைத்தாமே திருத்திக் கொள்ள முன்வரவேண்டும். இல்லை என்றால் இவர்களின் வட மாகாண இல்லங்களுக்கு முன் எமது தமிழ் இளைஞர்கள், யுவதிகள் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டியிருக்கும்.

தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகளைப் பார்த்தால் வெகு விரைவில் பஞ்சம், பட்டினி எம் மாகாணங்களிலும் தாண்டவமாடக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. ஏற்கனவே அசேதன உரத்தின் நிறுத்தத் தால் எமது விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களின் அறுவடை முன்னைய வருடங்களிலும் பார்க்க அரைப் பங்கு குறைந்துள்ளது. தற்போது தோட்டம் செய்பவர்கள் திடீரென்று வரும் பெருமழைகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்போதிருக்கும் எதிர்மறையான அரசியல், பொருளாதார நிலைமைகளை நாங்கள் எமக்குச் சாதகமாக மாற்ற வேண்டும். வடக்குக் கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் தம்மைத் தாமே பார்த்துக் கொள்ளக்கூடிய தன்னம்பிக்கை கொண்டவர்கள் என்பதை நாம் உலகறியச் செய்ய வேண்டும். வன்முறை நீக்கி தம்பி தன் காலத்தில் செய்தவற்றை இன்றும் நாம் பின்பற்ற வேண்டும்.

நாங்கள் யாவரும் இப்பொழுதிருந்தே தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரவேண்டும்.

நாம் தெற்கை நம்பியிருக்காமல் எமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். பாரிய செயற்திட்டங்களை தற்போதைக்கு மறந்துவிட்டு வீட்டுத் தோட்டங்கள், சிறு கைத்தொழில்கள், நெசவு வேலைகள், உள்ளூர் தூய நீர் மீன்பிடித்தல், வற்றல்கள் செய்தல், கருவாடு செய்தல் என்று மக்களின் அன்றாட வாழ்க்கைக்குக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களையும் மற்றைய தேவைகளையும் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இயற்கை உரத்தைப் பாவித்து விவசாயம் செய்ய முன்வர வேண்டும். அறுவடை குறைவாகக் கிடைத்தாலும் மக்களுக்கு உண்ண உணவு கிடைக்க வழிசெய்ய வேண்டும். போதிய தூய பால் இங்கு கிடைக்கும் போது ஏன் நாங்கள் பால்மாவை நாட வேண்டும்? எமது வாழ்க்கை முறையை மாற்ற வேண் டிய காலம் மீண்டும் உதயமாகியுள்ளது.

நான் முதலமைச்சராக இருந்த போது ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரைச் சந்தித்தேன். 'வடக்கு, கிழக்கு விவசாயிகள் ஏன் இலாபம் கிடைக்காத நெல் விதைப்பில் ஈடுபடுகின்றார்கள்? போதிய அரிசி குறைந்த விலையில் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து கிடைக்கின்றது. நெல் விதைக்கும் விவசாயத்தை வேறு பயிர்களுக்கு மாற்றி கூடிய ஆதாயம் பெறலாமே' என்றார். நான் மூன்று காரணங்கள் கூறி நெல் விதைப்பு தொடர வேண்டும் என்றேன். 'முதலாவது எமது மக்கள் சிவத்தரிசிக்குப் பழக்கப்பட்டவர்கள். தாய்லாந்து அரிசியை விரும்பமாட்டார்கள். இரண்டாவது எப்போதாவது போர் போன்ற ஒரு பேரிடர் ஏற்பட்டால் மக்கள் பட்டினியால் வாடுவர். மூன்றாவது எமது விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாளலாம். ஆனால் தொடர்ந்து எமது விவசாயிகள் தாங்கள் பழக்கப்பட்ட நெல் விவசாயத்தில் ஈடுபடுவதே உசிதம்' என்றேன். அவர் உலகளாவிய ரீதியில் எதையும் பார்த்ததால் தாய்லாந்தில் இருந்து நெல் பெறுவதை பக்கத்து வீட்டில் இருந்து பெறுவது போல் சாதாரணமாக நினைத்திருந்தார் போலும். பின்னர் கொரோனா காலத்தில் அவருடன் தொடர்பு கொண்டு நாங்கள் நெல் விவசாயத்தில் ஈடுபடாது இருந்திருந்தால் இன்று எம் மக்கள் பட்டினி கிடக்க வேண்டியிருந்திருக்கும்' என்றேன். அவர் மழுப்பித் தப்பித்துக் கொண்டார். ஆனால் நாங்கள் இன்று உண்மையாகவே பஞ்சகாலத்தை முகத்துக்கெதிர் பார்க்கின்றோம். ஆகவே பஞ்சத்துடனும் பட்டினியுடனும் போராட எமது மக்கள் திடசங்கற்பம் பூண வேண்டும்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் அந்தந்தப் பிரிவு மக்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெற்றுக் கொடுக்க கிராம சேவையாளர்கள் முன்வர வேண்டும். விதைகள், சிறுகைத்தொழில்களுக்கான தேவைகள் அல்லது சிறு வங்கிக் கடன்கள், நெசவுக்கேற்ற நூல் வகைகள் என்று மக்களுக்குத் தேவையான மூலப்பொருள்களைப் பெற்றுக்கொடுக்க கிராம சேவையாளர்கள் முன்வர வேண்டும். அவர்களால் முடியாதென்றால் கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றுக்கும் குடிமக்கட் தலைவர்கள் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் அந்தப் பணியினைச் செய்ய வேண்டும்.

வெளிநாட்டில் இருக்கும் எமது உறவுகளுக்குரித்தான காணிகள் பல, கேட்பார் இன்றிக் கிடக்கின்றன. இந்தக் குடிமக்கட் தலைவர்கள் குழுக்கள் இடங்களை அடையாளப்படுத்தி, உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு, அந் நிலங்களைக் குத்தகைக்கெடுத்து பயிர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஒரு சிறிய தொகை குத்தகைப் பணமாக உரிமையாளர்களின் வங்கிக் கணக்குகளில் இடப்படலாம். உரிமையாளர்கள் அறிவித்தலுடன் காணிகளைத் திருப்பிக் கேட்டால் அவற்றை அவர்களுக்கு நாம் அப்போதைய அறுவடையின் பின்னர் கையளிக்க வேண்டும். காணிகளில் வேலை செய்ய இளைஞர் யுவதிகள் குழுக்களை ஒன்று சேர்க்க வேண்டும்.

இதன் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தரிசு நிலங்களை இப்போதைய அவசரகாலத் தேவைகளுக்குப் பாவிப்பதே எமது நோக்கமாக இருக்க வேண்டும்.

எம்மால் எம்மைப் பராமரிக்க முடியும். வேண்டுமெனில் சிங்களப் பிரதேசங்களுக்கும் உதவிகளை நல்க முடியும் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டும்.

போர்க் காலத்தில் எமது மக்களின் உணவுத் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்து மேலதிக பொருள்களைத் தெற்கிற்கு அனுப்பினோமோ அதே போல் மீண்டும் செய்ய எமக்கொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. வடக்கு கிழக்குத் தமிழர்கள் தம்மைத் தாமே பரிபாலிக்கக் கூடியவர்கள் என்ற உண்மையை நாம் சேர்ந்து உலகத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

எமது மாகாணசபை மற்றும் மத்திய அரசாங்க அலுவலர்கள் எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தையும் நெருக்கடி நிலைமையையும் உணர்ந்து, சேர்ந்து மக்கட் சேவையைச் செய்ய முன் வர வேண்டும். அரச அலுவலர்கள் என்றாலும் அவர்களுக்கும் உறவினர்கள், குடும்பங்கள் வட கிழக்கில் உள்ளனர். அதை உணர்ந்து அவர்கள் செயற்பட வேண்டும். நான் முதலமைச்சராக இருந்திருந்தால் இதை முன்னின்று நடத்துவித்திருப்பேன். தற்போது அரசாங்க அதிபர்கள், மாகாணசபை செயலாளர்கள், மாவட்ட செயலாளர்களைப் போன்றோர் மக்களை ஆற்றுப்படுத்த முன்வரவேண்டும். ஆகவே அடுத்து செய்ய வேண்டிய பொறுப்புக்களை நாம் ஒன்று சேர்ந்து மக்கள் சார்பில் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். இது சம்பந்தமாக அரசாங்க சிரேஷ்ட அலுவலர்கள் மக்கள் தற்சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட உரிய அறிவுரைகள் வழங்க வேண்டும்.

ஆகவே தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமை மோசமாகிக் கொண்டே போகப் போகின்றது என்பது தான் எனது கணிப்பாகும். நாம் வர முன் காக்கப் பழக வேண்டும்.

அடுத்து நாம் செய்ய வேண்டியது, சுனாமியின் போது அரச படைகளும் புலிகளும் சேர்ந்து மக்களுக்கு உதவியது போல் நாம் கட்சி வேற்றுமைகளை மறந்து தற்சார்பு நடவடிக்கைகளில் ஒன்றாகச் செயல்பட முன்வர வேண்டும். – என்று தெரிவித்தார்.

## காலிமுகத்திடல் வன்முறையைத் தூண்டியவர்களுக்கு பயணத் தடை கோருகின்றது சட்டத்தரணிகள் சங்கம்

காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் ஈடுபட்டவர்களுக்கு பயணத் தடை விதிக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்மொழிந்துள்ளது.

பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், அமைதியை மீட்டெடுக்கவும் அதிகாரிகள் தரப்பில் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை தேவை என்று சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்

இதன்படி, தமது நோக்கத்துக்காக வன்முறைக் குழுக்களை அலரிமாளிகையில் இருந்து கட்டவிழ்த்துவிடத் தூண்டிய, சதி செய்த மற்றும் வன்முறையில் கலந்துகொண்ட அனைவரையும் சட்டத்தின்கீழ் உடனடியாகக் கைது செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோருகிறது.

அவர்கள் அரசாங்கத்தில் அல்லது அவர்களது குடும்பத்தினர் எந்த பதவியில் இருந்தாலும், அதனை கருத்திற்கொள்ளாது இது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று சாலிய பீரிஸ் கோரியுள்ளார்.

பொலிஸாரால் இவ்வாறானவர்களுக்கு எதிராக உடனடி பயணத் தடைகள் பெறப்பட வேண்டும் என்றும் சாலிய பீரிஸ் கேட்டுள்ளார்.

இதேவேளை தனி ஆள்களின் சொத்துக்கள் மற்றும் அரச சொத்துக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை உடனடியாக நிறுத்துமாறும், அத்தகைய வன்முறையில் ஈடுபடுபவர்களையும் விசாரணை செய்து, கைது செய்து சட்டத்தின்படி கையாள வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## கீரி கடித்து பெண் சாவு!

கீரி கடிக்குள்ளாகிய வயோதிபப் பெண் 3 மாதங்களின் பின் உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கு நீர் வெறுப்பு நோய் காரணம் என்று மருத்துவ அறிக்கையிட்டுள்ள நிலையில் அதனை உறுதிப்படுத்த வயோதிபப் பெண்ணின் மூளையை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்ப சட்ட மருத்துவ வல்லுநர் க.வாசுதேவா பணிந்துள்ளார்.

புலோலி ஆலடியைச் சேர்ந்த பாலசுந்தரம் மங்கையக்கரசி (வயது–69) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் வயோதிபப் பெண்ணுக்கு கீரி கடித்துள்ளது. அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். எனினும் அவருக்கு விலங்கு விசர் தடுப்பூசி மருந்து வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் 3 மாதங்களின் பின் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக்கு நீர் வெறுப்பு நோயே காரணம் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலை சட்ட மருத்துவ வல்லுநர் கனக சபாபதி வாசுதேவா முன்னிலையில் வயோதிபப் பெண்ணின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவருக்கு நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய மூளையை கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்ப பணித்தார்.

# உடல், உள ரீதியிலான அரும்பணி தாதியம்!

(இன்று சர்வதேச தாதியர் தினமாகும். அதனைமுன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது)



சோ.இராசேந்திரன்
ஓய்வுநிலை தாதிய பரிபாலகர்,
ஆதார வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

மானிட வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்பு வரை பராமரிப்பு என்பது வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்த ஓர் அம்சமாகும். பிறப்பு, விருத்தியியல் மாற்றங்கள், நோய்வாய்ப்படுகின்ற நிலைகள், நோய் மாறிய பின் வேண்டின் சாதாரண வாழ்வியலிற்கு மீண்டுவர உதவுகின்ற புனருத்தாரண விடயங்கள், இறப்பிற்கு முன்பாக / இறப்பு ஆகிய வேளைகளில், வேண்டியவிடத்து உடல், உள, சமூக தேவைகளை நிறைவேற்ற ஒருவருக்கு அதற்கான பராமரிப்பு இன்றியமையாததாகும். பாரம்பரியத்தில் பெற்றோர், சகோதர சகோதரிகள், பாட்டன், பாட்டிமார், உறவினர், நண்பர்கள் பராமரிப்பு உதவிகளைப் புரிவர்.

இது ஒரு தொழில் வாண்மை சாராத – அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் மன ஆறுதல்களை வழங்கும் ஒரு தனிப்பட்ட உறவுநிலை சார் மனிதாபிமான அனுகுமுறையாகும். ஆயினும் ஆதிகாலங்களிலேயே பராமரிப்பு அனுபவமுடையோர் மற்றும் பரம்பரையாகத் தேர்ச்சியடைந்த குறிப்பிட்ட சில பெண்கள் (நமக்கு அண்மித்துள்ள), நோய் வாய்ப்பட்டோருக்கு வேண்டப்படுமிடத்து உடல், உள ஆதரவுகள், சௌகரியங்களைப் பேணிவந்தனர்.

காலவோட்டத்தில் மனித நாகரிகமாற்றம், தொழில், கல்வி மாற்றம், பல்வேறுபட்ட நாட்பட்ட நோய்ப்பரம்பலின் அதிகரிப்பு, நவீன விஞ்ஞான மருத்துவ அனுகுமுறைகளின் பாரிய முன்னேற்றங்கள், சிரேஷ்ட பிரஜைகளின் அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணிகளால் நோயாளருக்கு பராமரிப்பு வழங்க விஞ்ஞான கருதுகோள்களுக்கு அமைய அறிவு, திறன், மனப்பாங்குகளில் தேர்ச்சி பெற்ற தாதியம் தொழில் வாண்மையான ஒரு சேவையாக உருவாகியது. பல்வேறு படிநிலைகளினூடான வளர்ச்சி பெற்று, தாதியம் தனித்துவமான – சுயாதீன தன்மையான – தொழில் வாண்மையாக மிளிர்கின்றது.

தாதிய சேவை தனித்துவமானது. மருத்துவ சேவையுடன் தேர்ச்சிநிலைத் தாதியமும் ஒருங்கே வழங்குதல் நோயாளர் குணமடைதலிற்கு மிகமிகத் தேவையானது என்பதை 'புளொரன்ஸ் நைற்றிங்கேல்' அம்மையார் 1854 – 1855 ஆம் ஆண்டுகளில் 'கிரிமியன்' யுத்தத்தில் காயமுற்ற பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்களைப் பராமரித்ததன் மூலம் விஞ்ஞான ரீதியான உலகிற்கு எடுத்தியம்பினார். இவரின் தலைமை வழிகாட்டலில் பணிபுரிந்த தாதியர் குழவின் பராமரிப்பினால், காயமுற்ற இராணுவ வீரர்களின் இறப்பு வீதம் 42 இலிருந்து இரண்டாகக் குறைவடைந்தது.

நோயாளர்களுக்கான அடிப்படைத் தேவைகளான சுத்தம், சுகாதாரமான குடிநீர், படுக்கை விரிப்புக்கள், கிருமியளிக்கப்பட்ட பந்தணங்கள், வைத்தியசாலையினுள் நோய் ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தொற்றாமல் கவனித்தல், குணமாக்கும் உறவாடல், இரவிரவாகத் தொடர் அவதானிப்புக்கள் போன்ற புரட்சிகரமான (அக்காலத்தில் யுத்த சூழலில்) பராமரிப்பு அனுகுமுறைகளை மேற்கொண்டு, 'தாதியம்' என்ற தொழில் வாண்மைக்குப் புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தார். தாதியம் என்பது விஞ்ஞான அனுகுமுறையான கலை நுட்பத்துடன் கூடிய மனிதாபிமான பணி என உலகிற்கு நிரூபித்தார். இரவிரவாக எவ்வித மின்சார வெளிச்சமற்ற பராமரிப்பு விடுதிகளை அனுகி, ஆதரவு வழங்கி, கண்காணிப்புச் செய்து பராமரிப்புக்களை வழங்கியதால் 'விளக்கேற்றிய சீமாட்டி' (The Lady with the Lamp) என உலகம் பூராகவும் இன்று வரை நினைவுகூரப்படுகின்றார்.

தாதியம் பற்றிய நைற்றிங்கேல் அம்மையாரின் மூலாதாரக் கொள்கை – தாதியானவர் தனது சிந்தித்தல், மனிதாபிமான ஒத்துழைப்பு, பராமரிப்பு நுண்திறன்களைக் கையாள்வதன் மூலம் நோயாளர்களுக்கு உடல், உள குணமாக்கலை வழங்க வேண்டும். மேலும் உலகிற்கு Notes on Hospital என்ற பல நூல்களை எழுதித் தனது அனுபவங்களை, வழிகாட்டல்களை உலகிற்கு வழங்கியுள்ளார்.

1826 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அவதரித்த நைற்றிங்கேல் அம்மையார் 1910 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி காலமானார். நைற்றிங்கேல் அம்மையாரின் அரிய சேவைக்கும், நவீன தாதியத்துக்கு வழிகோலியமைக்காகவும் அவர் பிறந்த மே மாதம் 12 ஆம் திகதி ஆண்டுதோறும் சர்வதேச தாதியர் தினமாகப் பிரகடனப்படுத்தி, அவரையும் சமகாலத்துத் தாதியக் கருத்தியலையும் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு தாதியர் தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

1974 ஆம் ஆண்டு முதல் சர்வதேச தாதியர் சபை (ICN - International Counsil of Nurses) மே 12 ஆம் திகதியை சர்வதேச தாதியர் தினமாக ஆண்டுதோறும் பிரகடனப்படுத்தி குறிப்பிட்ட ஆண்டுக்கான கருப்பொருளை மையமாகக் கொண்டு நோயாளர் பராமரிப்பின் புதிய அனுகுமுறைகள், தாதிய வாண்மையின் மேம்பட்ட அனுகுமுறைகள், சவால்கள் போன்ற விடயங்களில் கருத்தாடல்கள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பல நாடுகளில் தாதியர் தினமானது ஒரு வாரகால முன்னெடுப்புக்களைக் கொண்டிருக்கும். இது தாதிய சேவையின் அர்ப் பணிப்பு, நோயாளர் பராமரிப்பு, அவர்களின் திருப்தி, தாதியர்களின் திருப்தி, சவால்கள், தேவைகளைப் பற்றிய வெளிப்படைத் தன்மை மற்றும் சமுதாய புரிந்துணர்வை மேம்படுத்துவதுடன் தாதியர்களின் பரஸ்பர பாராட்டுக்கள், திருப்திநிலைப் பகிர்வுகளை மேம்படுத்த உதவும்.

உலக சுகாதார நிறுவனம் 'சர்வதேச தந்திரோபாய வழிகாட்டி 2021 – 2025' மூலம் பின்வரும் நான்கு

விடயங்களில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

1. தாதிய கல்வி :–தமது சுகாதார சேவைகளுக்கு ஏற்ப நாடுகள் அறிவார்ந்த – தேர்ச்சி நிலைத் தாதியர்களை உருவாக்கும் நடவடிக்கைகளைச் செய்தல்.

2. தாதியப் பணிநிலை :– தேவைக்கு ஏற்ப தாதிய ஆளணியை ஏற்படுத்தி, பணிக்கமர்த்தல், பயிற்சியளித்தல், தக்கவைத்தல் என்பவற்றைச் சர்வதேச தரத்தில் அந்தந்த நாடுகள் மேற்கொள்ளல்.

3. தாதிய தலைமைகளை வலுவூட்டல் :– தாதியர்களின் அதிகாரம், வலு குறிப்பிட்ட அளவாவது மேம்படுத்தப்பட்டுச் சிரேஷ்ட நிலையில் தீர்மானம் எடுக்கும் தன்மையை மேம்படுத்தல், அவ்வாறு எதிர்காலத்திலும் தொடர்தல்.

4. சேவை வழங்கல் :– தமது அறிவு, ஆற்றலைப் பூரணமாக வெளிப்படுத்திப் பாதுகாப்பான ஆதரவுத் தன்மையான சேவையை பராமரிப்பு, கல்வி சேவைகளில் வழங்கல்.

மேற்கூறிய நான்கு அம்சங்களிலும் தாதிய மேம்பாட்டு செயற்பாடுகள் அமையின் பூரணமான தாதிய சேவையில் வளர்ச்சி / விருத்தியை அடையலாம். 2022 ஆம் ஆண்டுக்கான கருப்பொருளானது 'தாதியத்திற்கான முதலிடல் மூலமும் உரிமைகளை மதித்தல் மூலமும் உலக ஆரோக்கியத்தை உறுதிசெய்தல்.' மேற்கூறிய கருப்பொருளை மையமாகக் கொண்டு பரப்புரைகள், அறிவூட்டல், கருத்தாடல்கள், தர்க்க ரீதியான நோக்கினூடு தாதியர் தமது நிலைகள் விருத்தி பற்றி சிந்தனையெழுச்சி பெறல் போன்ற செயற்பாடுகள் தாதிய மேம்பாட்டுக்கு உதவும் நடைமுறைகளாகும். இந்தக் கருப்பொருள் விடயங்களில் தாதிய சேவை, தாதிய கல்விச் சேவையில் பணிபுரிகின்ற அனைத்துத் தாதிய வாண்மையினரும் ஈடுபடல் தாதிய மேம்பாட்டுக்கான காத்திரமான பங்களிப்பாக இருக்கலாம். மேலும் சுகாதார அமைச்சின் கொள்கை வகுப்பாளர், நிறைவேற்று அதிகாரிகள், தொழிற் சங்க முக்கியஸ்தர்கள், துறைசார் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது தனித்தனி சிந்தனைக் கருவூலத்திலிருந்து விலகி, இலங்கையில் தாதிய வாண்மை மேம்பாட்டை மேற்கூறிய நான்கு விடயங்களிலும் இலக்கு மையப்படுத் தப்பட்ட தொடர்செயற்பாட்டுப் பொறிமுறையை முன்னெடுத்தல் முக்கியமானதாகும்.

தாதியப் பணியானது மனிதாபிமான சேவை மனப்பாங்குடையதாகும். நோயாளரின் சில நோய் அவஸ்தைகள், வெளிப்பாடுகள், தீவிரநோய்க்குணங்குறிவெளிப்பாடுகளான நோ, வலி தாங்கமுடியாத நிலைகள், அதீத இரத்தப் போக்குடனான பாரிய காயங்கள், புற்றுநோய், உள நோய்களின் வெளிப்பாடுகள் – மிகுந்த மனதைத் தொடுகின்ற வெளிப்பாடுகள், சிறு குழந்தைகளின் வெளிப்பாடுகள், சத்திரசிகிச்சைக்கு முன் / பின்னான கரும நிலைகள், தொற்று நோய்களின் தனிமைப்படுத்திப் பராமரிக்கும் நிலைகள் உதாரணம் – கொவிட் 19 நோயாளர்களின்இறப்பு அவஸ்தைகள், இறப்பு, ஐம்புலன் உணர்வுகளினூடு பராமரிப்போர் மனங்களைத் தொட்டு, வேதனைக்கு உள்ளாக்கும் தன்மையுடையவை. இவ்வாறான அனுபவங்களைத் தினமும் முகம் கொடுத்து, தம் மனங்களைத் தாமே தேற்றித் துவண்டுவிடாமல் ஏனைய நோயாளர்களின் நன்னிலைக்காக உடல், உள ரீதியாக அரும்பணிபுரியும் தாதியர் பணிக்கு நாம் சிரம் தாழ்த்தி மன நெகிழ்வுடன் மரியாதை செலுத்துகின்றோம். நாளாந்தம் சுழற்சி முறையில் காலை, மாலை, இரவு நேர கடமை (நித்திரைக்கு நியமநேரம் அற்ற கடமை கடப்பாடு) புரிகின்ற ஒரு தொழிலாகும். இது தாதியர்களின் உடற்றொழிலியல்.

நேரமாறுபாடு (circardian system) வெவ்வேறு நேரங்களில் உணவு உண்ணல் (உதாரணம் இரவுக் கடமைகளில் 8.30pm மணிக்கு என்ற நியமம் ஏற்பட வாய்ப்பின்மை, நோயாளர் பராமரிப்பு முன்னுரிமையே அதனைத் தீர்மானிக்கும்) அவசர கடமைகளில் ஓய்வின்மை, உணவு உண்ண முடியாத நிலைகள் பாரிய வளத்தட்டுப்பாடுகள் மத்தியில் நோயாளர் சிகிச்சைப் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதில் உள்ள நாளாந்த நெருக்கீடுகள், பராமரிப்பாளர், சிகிச்சையாளர், விடுதிப் பொறுப்பாளர், சிகிச்சைக்குழு இணைப்பாளர், தொடர்பாளர் விடுதி சுத்தம், உடைமைகள் பொறுப்பாளர் என்ற பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற் றுதல் போன்ற தினசரி நிகழ்கின்ற பிரச்சினைகளால் தொழில்சார் நெருக்கீடுகளுக்குத் தாதியர் தினமும் முகம் கொடுக்கின்றனர். புதிய தாதியர் ஆளணிகள் விருத்தி செய்யப்படாமை, துறைசார் விசேட தாதியர் பயிற்சிகள் ஒழுங்கு முறையில் செயற்படுத்தாமை என்பன தாதியருக்கான நெருக் கீட்டை ஏற்படுத்தும் ஒரு அடிப்படை விடயமாகும். நோயாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப சர்வதேச உள்ளூர் நியமனங்களுக்கு அமைவாகத் தாதியர் இன்மையால் தாதியர் அல்லற்படுவதுடன் நோயாளர்களுக்கும் தனித்துவமான நிறைவான சேவை கிடைப்பதில் பாதிப்பை ஏற்படுத்தும்.

குறிப்பாக 2020 – 2021 ஆண்டு காலங்களில் முழு நாட்டிலும் கோவிட் 19 தீவிர தொற்று முழுமக்களையும் இறப்பு, நோய்த்தாக்கம், தனிமைப்படுத்தல், கல்விச் செயற்பாடு பாதிப்பு, வருமானமீட்டல் பாதிப்பு என்று சமூகத்தின் முழுமட்டத்தினர்க்கும் பாரியபாதிப்பு ஏற்பட்டது. அவ்வேளை தாதியர்களின் முழுமையான அர்ப்பணிப்பு, தியாகம் எல்லோர் மனதிலும் தாதியர் பற்றிய மதிப்பை சமூகத்தில் மேலும் உயர்த்தியது. நோய் தொற்றும் வாய்ப்பு, பாதுகாப்பு அங்கியுடன் தொடர்ச்சியாக பல மணித்தியால கடமை, கோவிட் தொற்றுக்கு ஆளாகியமை, குடும்பத்தில் நோய்த் தொற்று வாய்ப்பு பற்றிய அச்ச நிலை, இரவு பகலாக நோயாளர் கண்காணிப்பு, பராமரிப்புச் செயற்பாடுகள் என்பன மிகவும் பாதிப்பினை தாதியர் உலகிற்கு ஏற்படுத்தியது. ஆயினும் தன்னலமற்ற மிக உயர்வான தியாக மனப்பாங்கு, எல்லோரும் மதிக்கும் உயர்வான தாதியர் சேவையை மக்களுக்கு வழங்கக் காரணமாக அமைந்தது.

2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தாதியர்தின கருப்பொருளான 'தாதியத்திற்கான முதலீடு செய்வதன் மூலமும் உரிமைகளை மதிப்பதன் மூலமும் உலக ஆரோக்கியத்தை உறுதி செய்தல்.' ஆனது பின்வரும் நான்கு விடயங்களிலும் பொருத்தமான கொள்கை வகுப்பாளர், நிறைவேற்று அதிகாரிகள், நிறுவனமட்டப் பொறுப்பதிகாரிகள், தாதியசேவையின் (வைத்தியசாலை, கல்வி) சிரேஷ்ட அதிகாரிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், ஒவ்வோர் தாதியர்களின் ஈடுபாடுகள், உறுதியான செயற்பாடுகள் மூலம் முன்னோக்கி நகர்த்தலாம். பொருத்தமானவர்கள் தன்னால் எதனைச் செய்ய முடியுமோ எனச் சாதகமாகச் சிந்திப்பதன் மூலமும் சாதகமான மனப்பாங்கினை ஏற்படுத்துவதன் மூலமும் திட்டமிட்டுச் செயற்படுத்தி முன்னோக்கி நகர்த்தலாம்.

தாதியத்திற்கான முதலீடு என்பது வளங்களை மேம்படுத்தல், ஆளணியினரை அதிகரித்தல், பதவி உயர்வு, பயிற்சி போன்ற விடயங்களில் சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் செயற்பாடுகள், பயிற்சிச் செயலமர்வுகளை மேற்கொள்ளல், விசேட துறைசார் பயிற்சிகளை வழங்குதல், ஒவ்வொரு தாதியரும் தனது திறன் விருத்திகளில் ஈடுபடல், தாதிய பட்ட, பின் பட்டக் கல்விகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தல், சர்வதேச தாதியக்கல்வி நிறுவனங்களுடன், உள்நாட்டுத் தாதியக்கல்வி நிறுவனங்களை இணைத்தல், தாதிய தொழிற்சங்கங்கள், பணியாளர்களின் உரிமை, பெறுகைகள், வாண்மை, தரமுயர்தல் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட பல்வேறு செயற்பாடுகளிலும் பொருத்தமான மேற்குறிப்பிட்ட ஈடுபாட்டாளர்கள், முனைப்புடன் ஈடுபட்டு, சிந்தித்தல், செயற்படல் என்பன இவ்வருட கருப்பொருள் யதார்த்தமடைய முக்கியமானவையாகும்.



# திருவருட் பயனை சிந்தையில் இருத்துவோம்!

இன்று உமாபதி சிவாச்சாரியார் குருபூசை தினம். அதையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.



மகாதேவ ஐயர் ஜெயராமமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

சமயம் என்றால் என்ன? சமயம் என்றாலே கடவுள் நெறி பற்றிச் சொல்லுவதா? என்னும் ஐயம் எழுவது இயல்பானதுதான். இதனால் சமயம் என்றால் என்னவென்று ஒரு தெளிவு அவசியமாய் வேண்டப்படுகி றது அல்லவா ! சமயம் என்றால் மக்கள் ஆன்மலாபத்தை அடைதற்குரிய வழியைத் தெரிவிப்பதே என்று சொல்லப்படுகிறது. கடவுள் நெறிபற்றிக் கண்டுகொள்ளாமலே சமயம் என்று சொல்லிக் கொள்ளும் நெறிகளும் காணப்படுகின்றன என்பதும் நோக்கத்தக்கது.

சமயங்கள் யாவுமே கடவுள் கொள்கையினை ஏற்றுக் கொண்டுள்ளனவா என்பதிலும் தடுமாற்றம் காணப்படுகிறது. சமயங்கள் என்று பெயரளவில் இருந்தாலும் கடவுள் என்னும் சிந்தனையினைத் தொடாதனவாகவும் சமயங்கள் இருப்பதையும் காணமுடிகிறது. கடவுள் கொள்கையினுக்கு முதன்மை கொடுக்காமல் ஓரளவு நிலையில் ஒத்துக் கொள்ளும் சமயங்களும் இருக்கின்றன.அதேவேளை சமயம் என்னும் பெயரில் இந்தியாவில் தோற்றம் பெற்ற பௌத்தமோ, சமணமோ கடவுள் என்னும் கருத்தை ஏற்றிடாச் சமயங்களாகவே இருக்கின்றன. தர்க்கம் வேறு. தத்துவம் வேறு. தர்க்கிப்பது என்பதை மூலமாய்க் கொண்டனவே பௌத்தமும், சமணமும். தத்துவத்தை முதன்மைப்படுத்தும் சமயங்கள் நிலை வேறாய் அமைகிறது. அந்த வகையில் சைவசமயமானது சைவசித்தாந்தம் என்னும் தத்துவத்தை முழுமையாக்கி கடவுள் நெறியினை வலிமையாக்கி நிற்கிறது என்பதைக் கருத்திருத்தல் அவசியமாகும்.

உலகில் பிறக்கின்ற உயிர்களின் நிலையினை மையப்படுத்தி சமயங்களின் நிலையினை நோக்குதல் அவசியமாகிறது.எல்லாச் சமயங்களுமே உயிரின் இறுதி நிலை என்ன என்பது பற்றி எடுத்துக் கொள்ளுவதில் நாட்டம் உடையனவாக இருக்கின்றன என்பதும் கருத்திருத்த வேண்டியதே. இந்த நோக்கில் பார்க்கின்றபொழுது உயிரின் முடிந்த பயன் என்பது முத்தி அல்லது வீடுபேறு என்னும் நிலைக்குள் வந்து விடுகின்றன. ஆனால் இதிலும் ஒருமித்த நிலை இல்லை என்றே ஆகிறது. அந்தந்த சமயத்தின் நிலைக்கு ஏற்பவே இந்த முத்தி என்பதும் எடுக்கப்படுகிறது என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இந்த நிலையில் சைவமசமயத்தை உற்று நோக்கும்பொழுது – கடவுள் கொள்கையினை முற்றிலும் முதன்மையாகக் கொண்டே விளங்குகிறது என்பது நோக்கத்தக்கதாகும். எது நடப்பதானாலும், எது நடந்தாலும், எது நடப்பதாக இருந்தாலும் அத்தனைக்கும் கடவுளே காரணம் என்றும் அவனது திருவருளே பெருந்துணை என்றும் அசையாத நம்பிக்கையினைக் கொண்டிருக்கிறது. முத்தி என்னும் பெரும் பயனானது உயிர் இறைவனது திருவருளை அடைவதுதான் என்பது சைவத்தின் நிலையாகும்.திருவருளினை மையப்படுத்தி சைவசமயம் இருக்கின்ற காரணத்தால் சைவசமயத்தை திருவருள் நெறி என்று பெயரிட்டு அழைப்பது மிகவும் பொருத்தமாய் இருக்கும் அல்லவா!

அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால் – அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு

காரைக்கால் தந்த தமிழ்ச் செல்வியின் இப்பாடல் இறைவன் திருவருளினைக் காட்டுவதும் நோக்கத்தக்கது.

திருவருளினைப்பற்றி சித்தாந்த சாத்திரங்கள் யாவுமே விளக்கி நிற்கின்றன. ஆனால் எந்தச் சித்தாந்த சாத்திரங்களும் திருவருள் என்பதைத் தலைப்பாக்கி அந்தப் பெயரில் இருக்கின்றனவா என்றால் – அந்த நிலையில் ஒன்று மட்டும் தன்னை முன்னிலைப்படுத்தி நிற்பதைக் காணமுடி கிறது, அதுதான் உமாபதி சிவாச்சாரியார் என்னும் அனுபூதிமானால் அளிக்கப்பட்ட மிகவும் பெருமைமிக்க திருவருட்பயன் ஆகும். ஒன்றே முக்கால் அடியில் அமைந்த வள்ளுவப் பெருமானின் திருக்குறள் காலத்தால் முந்தியது. கருத்துக்களால் நிறைந்தது. திருக்குறள் அறநெறியினை அள்ளித்தரும் நூல். திருக்குறள் வழியில் பயணித்து அவரின் குறள் வடிவினையே கையாண்டு அருள் நெறியினை வழங்கிடும் வண்ணம் அமைந்ததுதான் திருவருட்பயன். உலகிலே இருக்கின்ற மக்கள் உணரவேண்டிய நெறிகள் இரண்டு.ஒன்று உலகியல் நெறி. மற்றயது மெய்நெறி. இதில் உலகியல் என்பதை பொது நெறி என்றுதான் எடுக்கலாம்.ஆனால் மெய்நெறி என்பதைச் சிறப்பு நெறி என்றே எடுத்திடல் வேண்டும். பொது நெறிக்கு திருக்குறள் வாய்த்தது. சிறப்பு நெறிக்கு அதன் வழியில் பயணப்பட்ட திருவருட் பயன் வாய்த்திருக்கிறது. உமாபதி சிவாச்சாரியார் வள்ளுவருக்கு பிற்பட்ட காலத்தவராய் இருந்த பொழுதும், வள்ளுவரின் வழியில் பயணப்பட்டு சித்தாந்த தத்துவத்தை மிகவும் சிறப்பாக ஒன்றே முக்கால் அடியில் கொண்டுவந்து தந்திருக்கும் ஆற்றலுக்குக் காரணமே அவருக்குக் கிடைத்த ஆண்டவனின் திருவருள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. உமாபதி சிவாச்சாரியார் காலத்தில் குறள் வடிவில் இலக்கியம் என்பது காணப்படா நிலையில் திருவருட் பயன் குறள் வடிவில் வாய்த்திருக்கிறது என்பதும் ஆண்டவனின் கருணையென்றே கருதிட வைக்கிறதல்லவா! திருவருட்பயன் நூலினை மெய்ந்நெறித் திருக்குறள் என்று அழைப்பதும் பொருத்தமாய் இருக்கும் அல்லவா!

குறள் வெண்பாவில் நூலினை ஆக்கிடப் பலருமே முன்வருவதில்லை. அதற்குக் காரணம் நினைத்த கருத்தினையெல்லாம் அத்தனை எளிதாகக் குறள் வெண்பாவில் கொண்டுவந்து காட்டிவிடல் இயலாததாகும். அப்படிச்சொல்லமுற்பட்டாலும்சொற்சுவையும், பொருட்சுவையும் பொலிந்திடக் குறள் வெண் பாவினைக் கையாண்டு வெற்றி பெற்றவர்கள் என்னும் பொழுது ஒரு சிலரே வருவார்கள். அப்படியானவர்களுள் திருவருட்பயனை அருளிய உமாபதி சிவாச்சாரியார் அமைகிறார் என்பதும் சிறப்பாய் இருக்கிறதல்லவா!

சைவசிந்தாந்த நூல்களில் மெய்கண்ட தேவரின் சிவஞான போதம் முக்கியமானது. அதுபோல் சிவஞான சித்தியாரும் முக்கியமானது. சிவஞான போதத்தின் வழிநூலே சிவஞான சித்தியாராகும். அப்படி இவை இரண்டும் இருக்க உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம் என்னும் நூலினை ஏன் படைக்க வேண்டும். என்னும் சிந்தனை எழுகிறதல்லவா? சிவஞான போதத்தை, சிவாஞான சித்தியாரை படித்து அதன் நுட்பங்களை எழுதில் அறிந்து கொள்ளுவது எல்லோர்க்கும் இலகுவானதாக இருக்கவில்லை. இந்த நிலையிலேதான் யாவரும் அணுகும் வகையில் இலகுவாக்க சிவப்பிரகாசம் நூலினை உமாபதி சிவாச்சாரியார் வழங்கும் நிலை ஏற்பட்டது. சிவப்பிரகாசத்துக்கு உதவியாகவே திருவருட் பயனை அருளினார் என்பதும் நோக்கத்தக்கதாகும், திருவருட் பயனினை முதலில் தெரிந்து கொண்ட பின்னர் அது காட்டுகின்ற வழியில் சிவப் பிரகாசத்தைப் பயின்றால் சித்தாந்தப் பொருளினை முட்டினின்றி நன்றாய் விளங்கிடக் கூடிய தாக இருக்கும் என்பது கருத்திருத்த வேண்டிய முக்கிய விடயமாகும். சிவாகமக் கடலைக் கடக்க உதவிடும் மரக்கலம் சிவப்பிரகாசம் என்றால் அந்த மரக்கலத்தை இயக்கிடும் மாலுமியாக அமையப் பெற் றிருப்பதுதான் திருவருட்பயன் எனலாம். வள்ளுவத்தை மனமிருத்தி அவர் வழியில் பயணித்து சைவசித்தாந்த கருத்துக்களை வழங்கிட ஆசைப்பட்டார் உமாபதி சிவாச்சாரியார். வள்ளுவர் அறம். பொருள், இன்பம் என்னும் அளவில் நின்றுவிட உமாபதி சிவாச்சாரியார் அதற்கு அப்பால் சிந்தித்து வீடு பற்றி சொல்லுவதையே குறிக்கோளாக்குகிறார்.

அந்த நிலையில்தான் திருவருட்பயன் வந்து அமைகிறது எனலாம். வள்ளுவரைப் பின்பற்றி அதிகாரங்கள் வைக்கிறார். அதிகாரங்களுக்குள் வள்ளுவர் பாதையில் பத்துக்குறள் என்பதையும் அமைக்கின்றார். ஆனால் அவர் அமைக்கும் குறள்களின் அடிநாதம் மட்டும் வீடு பேற்றினையும், திருவருள் பற்றியதுமாகவே அமைகிறது என் பதுதான் மிகவும் முக்கிய நிலையாகும்.வள்ளுவரை விட்டு விட திருவருட் பயன் ஆசிரியருக்கு மனமில்லை. அதனால் தொடக்கத்திலேயேவள்ளுவர்வழியில்தானும்பயணப்படுவதையே காணமுடிகிறது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்றுதான் வள்ளுவர் திருக்குறளை ஆரம்பிக்கின்றார். திருவருட் பயன் ஆசிரியரும் அதனைப் பின்பற்றியே

அகர உயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து

என்றேஆரம்பிக்கின்றார். வள்ளுவர் அகரத்துக்குக் காட்டும் விளக்கத்தில் இறைவன் என்பது சொல்லாமல் சொல்லப்படுகிறது. ஆனால் இறைவனையும் அவன் திருவருளினையும் மட்டுமே காட்டும் வண்ணமாய் வந்திருக்கும் திருவருட்பயனின் நிலையோ வேறாக நிற்கிறது. அகரத்தை அங்கிங்கு அலையவிடாமல் இறைவனுடன் இணைத்தே இருப்பதுதான் திருவருட்பயனின் தனித்துவம்! அதன் தத்துவம் என்றும் கொள்ளலாம் அல்லவா!

வள்ளுவர் உலகியலை உட்பொருளாக்கியபடியால்தான் கூறவந்த யாவற்றையும் பொதுமை நோக்கிலேதான் பார்க்கிறார். அதற்கான வழியிலேதான் அனைவரையும் அழைத்தும் செல்லுகிறார். ஆனால் திருவருட்பயன் ஆசிரியர் வள்ளுவர் வழியில் பயணப்படப் புறப்பட்டாலும் அவரின் உட்கிடை இறை பற்றியதும். இறையினது திருவருள் நிலை பற்றியதுமாகவேதான் நிறைந்திருக்கிறது.வள்ளுவர் எந்தவொரு நிலையிலும் கடவுளின் பெயரினைக் காட்டாமலே திருக் குறளினை அமைத்திருக்கிறார். ஆனால் வள்ளுவர் வழியில் பயணப்பட்ட உமாபதி சிவாச்சாரியாரோ திருவருட்பயனின் காப்புச் செய் யுளிலே ஆனைமுகக் கடவுளைக் கொண்டு வந்து நிறுத்தி விடுவதைக் காணுகிறோம்.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்

இதற்குக் காரணம் திருவருட்பயன் இறைவனின் திருவருளினை வெளிக்கொணரும் பாங்கில் பயணப்படுவதேயாகும். அந்த வகையிலேதான் திருவருட் பயனின் அதிகார வைப்பு முறைகளும் இருக்கின்றன என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். பதிமுது நிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளுறு நிலை, அறியு நிலை, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை.என்னும் பாங்கில் அத்தனை அதிகாரங்களுமே திருவருளோடு இணைந்தாகவே வீடு பேற்றின் நுட்பத்தை உணர்த்துவதாகவே, தத்துவ தரிசனமாகவேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் வள்ளுவத்தின் போக்கில் இருந்து தனித்துவமாய் திருவருட்பயனை உமாபதி சிவாச்சாரியார் வழங்கியிருக்கிறார் என்பதே உண்மையாகும்.

சமயபாடத்தைக் கல்வியில் இணைத்து அதனைக் கட்டாய பாடமாக்கிய நாடென்னும் வகையில் இலங்கைத் திருநாட்டைத்தான் குறிப்பிடவேண்டும். அரசாங்கத்தால் சமயபாடம் கல்வி அமைப்பில் கட்டாயம் ஆக்கப்பட்டிருக்கிறது. அவரவர் விரும்பிய சமயபாடத்தைக் கட்டாயம் படித்தே ஆக வேண்டும். அந்த வகையில் இலங்கையில் இருக்கின்ற சைவத்தமிழ் பிள்ளைகள் சைவசமயத்தைக் கற்றிடும் நல்லதோர் வாய்ப்பு வாய்த்திருக்கிறது. அங்கு சமயபாட திட்டத்தில் தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. சாத்திர நூல்கள் என்னும் நிலையில் திருவருட் பயன் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதுதான் இங்கு மிகவும் முக்கியமான செய்தியாகும். இந்தியாவில் தமிழ் நாட்டில்தான் தோத்திர நூல்களும் , சாத்திர நூல்களும் தோன்றின. அதனை ஆக்கிய மகான்களுமே தோன்றினார்கள். ஆனால் அங்கு சமயபாடம் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதே இல்லை என்பது நோக்கத்தக்கது.இதனால் இந்தியத் தமிழ்ப்பிள்ளைகளுக்குக் கிடைக்காத பெருவாய்ப்பு இலங்கை சைவத் தமிழ் பிள்ளைகளுக்கு வாய்த்திருக்கிறது என்பது இறைவனின் திருவருள் என்றுதான் எண்ணிட வைக்கிறது.

சைவசித்தாந்தக் கருத்துக்கள் என்றாலே பலரும் தூரவே ஓடி விடுவார்கள். அப்படி ஓடுபவர்களையெல்லாம் ஓடவிடமால் அருகில் அன்புடன் அரவணைக்கும் பாங்கில் அமையப் பெற்ற சித்தாந்த நூலாக அமையப்பெற்றிருப்பதுதான் திருவருட்பயனின் சிறப்பு என்று சொல்லலாம்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்வாதிகளின் வீடுகளில் இருந்து உரம், எரிவாயு, டீசல், பருப்பு மீட்பு!

## மக்கள் கஷ்டத்தில் வாழ அவர்கள் சுகபோகம்

கொழும்பு, மே 12

முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ மற்றும் குருநாகல் பிரதேச சபையின் தலைவர் அச்சல நிமந்த ஆகியோரின் வீடுகளில் பெருமளவான பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி அரசியல்வாதிகளின் வீடுகளில் இரசாயன உரங்கள், எரிவாயு சிலிண்டர்கள், டீசல் மற்றும் பருப்பு தொகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ மற்றும் குருநாகல் பிரதேச சபையின் தலைவர் அச்சல நிமந்த ஆகியோரின் வீடுகளில் இருந்து 12.5 கிலோகிராம் எடையுள்ள 140 எரிவாயு சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் லேக் வீதியிலுள்ள வீட்டில் மட்டும் 80 இற்கும் மேற்பட்ட லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திஸ்ஸமஹாராம, கிரிந்த மாகம பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமான வீட்டை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், 300 யூரியா உர மூடைகள், 3 ஆயிரம் லீற்றர் டீசல், 200 நெல் மூடைகள் மற்றும் சிவப்பு பருப்பு மூடைகள் போன்றவற்றை பிரதேச மக்களுக்கு விநியோகித்த பின்னர் வீட்டிற்குத் தீ வைத்துள்ளனர்.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தின் திம்புலாகல பந்தனகலவில் அமைந்துள்ள 50 ஏக்கர் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள களஞ்சிய அறையில் சுமார் 400 மூடைகள் யூரியா உரம் மற்றும் மற்றொரு இரசாயன உரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை விவசாயிகளால் கைப்பற்றப்பட்டன.

நாட்டில் உரம், எரிபொருள், எரிவாயு என்பனவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர். ஆட்சியில் இருந்த இவர்களின் வீடுகளில் பெருந்தொகை பொருள்கள் மீட்கப்பட்டமையால் மக்கள் மேலும் கொதிப்படைந்துள்ளனர்.

இலங்கையில் ஒரு மூடை யூரியா பசளை, 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன், அதற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அலரிமாளிகை சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சில மணித்தியாலங்களுக்குள் கைதுசெய்ய வேண்டும்

அலரிமாளிகை சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடுத்த சில மணித்தியாலங்களில் கைது செய்ய வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கைதுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிலர் வெளிநாடு செல்ல முயற்சிக்கின்றனர் என்றும் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லப் போகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, அவர்கள் மீது குறிப்பாக அலரிமாளிகை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கூறிய அவர், அவர்களை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்காதீர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அவன்கார்ட் நிறுவனத்தின் அலுவலகம் மீது தாக்குதல்




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவரான வர்த்தகரான நிஸசங்க சேனாதிபதியின் அவன்கார்ட் நிறுவனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள பிரதான அலுவலகம் செவ்வாய்க்கிழமை இரவு தாக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தி வரும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவான மக்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது. தாக்குதலில் அலுவலகத்தின் கண்ணாடிகள் உடைந்து சேதமாகியுள்ளன. அத்துடன் அலுவலகத்துக்குள் இருந்த சில உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸசங்க சேனாதிபதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான முன்னாள் இராணுவ அதிகாரியாவார். சர்வதேச கடற்பரப்பில் வர்த்தகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணிகளில் அவரது நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த பணிகளை மேற்கொண்டு வந்த அவன்கார்ட் நிறுவனத்துக்கான அந்த அனுமதியை கடந்த நல்லாட்சி அரசாங்கம் இரத்துச் செய்ததுடன் சர்வதேச கடற்பரப்பில் செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை கடற்படையினரிடம் ஒப்படைத்தது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த பின்னர், அது மீண்டும் அவன்கார்ட் நிறுவனத்திடம் வழங்கப்பட்டது.

சர்வதேச கடற்பரப்பில் பயணிக்கும் வர்த்தக கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதன் மூலம் அவன்கார்ட் நிறுவனத்துக்கு மாதாந்தம் பல மில்லியன் டொலர்கள் வருமானமாகக் கிடைத்து வருவதாகக் கூறப்படுகிறது.

அவன்கார்ட் நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரிகளாக முன்னாள் படையினர் பணியாற்றி வருகின்றனர். இந்த பாதுகாப்பு அதிகாரிகள் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் போது போராட்டத்தில் ஈடுபடும் நபர்கள் மீது தாக்குதல் நடத்த பயன்படுத்தப்படுகின்றனர் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்கு அருகில் அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, அவன்கார்ட் நிறுவனத்தின் ஊழியர்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்த அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

அத்துடன் கம்பஹாவில் நடைபெற்ற அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் முட்டை வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடத்தியவர்களை மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மடக்கிப்பிடித்தனர். பிடிபட்டவர்கள் அவன்கார்ட் நிறுவனத்தின் பாதுகாப்பு ஊழியர்கள் என்பது பின்னர் தெரியவந்தது.

# திருவருட் பயனைச் .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்தாந்தக் கருத்துக்களை விரித்து உரைக்காமல், சிக்கலாக்கி நிற்காமல், தட்டுமுட்டு இல்லாது இலகுவாய் மனதில் பதியும் வண்ணம், குறைந்த அடியில், நிறைந்த கருத்துக்களை தந்து நிற்பதாய் அமையப் பெற்றிருப்பதுதான் திருவருட்பயன் என்றால் அது மிகையாகாது.

நூறு குறட்பாக்களில் சித்தாந்தக் கருத்துக்களைத் தந்து நிற்கும் வகையில் திருவருட்பயன் அமையப் பெற்றிருக்கிறது என்பதும் அதன் சிறப்பினைக் காட்டி நிற்கிறது எனலாம். குறட்பாக்களைக் கையாண்டு கருத்துக்களை வெளிப்படுத்துவதில் வள்ளுவப்பெருமான் வல்லவரே. ஆனால் சித்தாந்தக் கருத்துக்களை குறட்பாவினால் வெளிப்படுத்தும் துணிவு உமாபதி சிவாச்சாரியாருக்கே உரித்தாகியிருப்பதையே திருவருட்பயன் தெளிவுறுத்தி நிற்கிறது. சித்தாந்தக் கருத்துக்களை யாவரும் தெளிவாய் மனதில் இருத்திட வேண்டும் என்னும் நோக்குடன், உவமைகளைக் கையாண்டு, திருவருட்பயனைத் தந்த நிலையினை வியந்துதான் பார்க்க வேண்டி இருக்கிறது எனலாம். வள்ளுவர் பெருமான் எடுத்துக்கொண்ட பொருளுக்கு, அவரின் நோக்குக்கு - வள்ளுவத்தில் உவமைகளைக் கையாழுவது அவ்வளவு கடினமானது அல்ல. ஆனால் சித்தாந்தத்தை காட்டும் வகையில் எழுந்த திருவருட்பயனில் காட்டி அதனையும் அகத்தினுள் அமர்ந்திடச் செய்திட்ட பாங்கினைப் பாராட்டி வியந்திடவே வைத்திட வைக்கிறதல்லவா! உவமைகளைக் கையாண்டதோடு மட்டுமல்லாமல் புதுமைவகை விளக்கத்தினையும் கையாண்டமையும் வியந்து பார்த்திட வேண்டியே இருக்கிறது.

ஏகன் அநேகன் இருள்கருமம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறு ஆதியில்

என்னும் திருவருட்பயன் குறளில் புதுமையினை உமாபதி சிவாச் சாரியார் புகுத்தியிருக்கிறார். சைவசித்தாந்தப்படி பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களே உள்ளன என்று கொள்ளுவதுதான் வழக்கம். ஆனால் இவரோ ஆறு என்று திருவருட்பயனில் காட்டுவது புதுமையாக இருக்கிறதல்லவா? ஆறு என்று சொல்லி விடாமல் அதற்கு விளக்கமும் அந்தக் குறளில் தருவதுதான் சிறப்பாகும். அதாவது இறைவன், உயிர்கள், ஆணவம், கன்மம்,சுத்தமாயை அசுத்தமாயை, என்று ஆறு என்று காட்டி, இவை அனைத்துமே அனாதியாக உள்ளன என்று கூறி தன்னுடைய புதிய பார்வையினை வெளிப்படுத்துவதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

ஊமன்கண் போல ஒளியும் மிக இருளே
யாம் மன்கண் காணா தவை

கூகை என்னும் பறவை இங்கே உவமையாகக் காட்டப்படுகிறது. ஆணவமாகிய இருளினை அனைவர் மனத்திலும் பதித்திடக் கையாண்ட இந்த உவமை புதுமையாய் இருக்கிறதல்லவா? பொருள்களை ஞானக் கண்ணால் காண முடியாத உயிர்களுக்கு ஞான மெல்லாம் அஞ்ஞானம் போலவே தோற்றமளிக்கும். அது எப்படி என்பதை விளக்கிடவே இங்கே கூகை வருகிறது. கூகைக்கு பகலிலும் கண் தெரியாது. பகலில் சூரியனின் வெளிச்சத்தைக் கூட கூகை இருளாகவே பார்க்கும். உவமையின் சிறப்பு தெரிகிறதல்லவா !

ஒருபொருளும் காட்டாது இருள் , உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது

பலரைப் புணர்ந்தும் இருபாவைக்கு உண்டு என்றும்
கணவற்குத் தோன்றாத கற்பு

பால்ஆழி மீன்ஆடும் பான்மைத்து அருள் உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து

பரப்பமைந்து கேண்மின் இது பாற்கலன் மேற் பூசை
கரப்பு அருந்த நாடும் கடன்

விடம்நகுலம் மேவினும் மேய்ப்பாவகனில் மீளும்
கடனில் இருள்போவது இவன்கண்

எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகன்
தங்குமவன் தானே தனி

ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும் நற்கல்அனல்
பானு ஒழியப் படின்

இங்கே காட்டப்பட்ட திருவருட் பயன் குறள்களை உற்று நோக்கும் பொழுது சிந்தாந்தக் கருத்துக்களை அதாவது சிக்கலான கருத்துக்களை, சிந்தனைகளை இலகுவாக்கிட எடுத்திட்ட புதுமையும், உவமைகளும் புலனாகி நிற்கிறது அல்லவா!

சித்தாந்த சாத்திரங்களைப் படித்திட நினைப்பவர்கள் மிகவும் குறைவு. அதற்குக் காரணம் அவை அமைந்திருக்கும் பாங்கு என்று கூடச் சொல்லலாம். துணையில்லாமல் அவற்றைப் படித்து விளங்குவது என்பது சற்று கடினமாகவே காணப்படுகிறது என்பதையும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இவற்றை எல்லாம் மனதில் இருத்தியே யாவரும் எழுதில் சித்தாந்தத்தை நாடவேண்டும். அதனுள் மூழ்கிட வேண்டும் என்னும் நோக்கில் அமையப்பெற்றிருப்பதுதான் உமாபதி சிவாச்சாரியார் என்னும் அனுபூதிமானால் அருளிச் செய்யப்பட்ட திருவருட்பயன் என்னும் நூலாகும். படிப்போம்! பயன் பெறுவோம்! பரமனின் அருளினை உணர்ந்திடுவோம் ! பரிபக்குவமும் வந்து வாய்க்கும்!

# மகசின் சிறைச்சாலையில் வைரஸ் காய்ச்சல் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்பு!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(இ.கலையமுதன்)

புதிய மகசின் சிறைச்சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே முருகையா கோமகன் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

பல வருட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகப் பாதிப்பை உணர ஆரம்பித்துள்ளனர்.

புதிய மகசின் சிறைச்சாலையில் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் பலரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். வைத்தியம் பெறுவதற்கான மருந்துகள் கூட பெரும் தட்டுப்பாடாக உள்ளது. மேலும் தற்போது சாதாரணமான பனடோலைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. அரசியல் கைதிகளின் உறவினர்கள் இதனை எமக்கு தெரியப்படுத்தி கவலைப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், அரசாங்கம், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் கருத்திற்கொண்டு உதவி செய்ய முயற்சிக்க வேண்டும்.

அரசியல் கைதிகள் பலரும் தொற்றா நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இவ்வாறான நோய்களாலும் மருத்துவ ரீதியாக புறக்கணிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகிறது. சம்பந்தப்பட்ட தரப்புகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டை சூறையாடி பொருளாதாரத்தை நலிவடையச் செய்த நபர்கள் தப்பியோடக்கூடிய சூழலில் சாதாரண குற்றம் செய்ததற்காக 10 தொடக்கம் 26 வருடங்கள் வரை தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். – என்றார்.




# சிங்கள மக்களுடன் தமிழர்கள் நாம் நல்லுறவை வலுப்படுத்துவதால் பிரச்சினைகளை தீர்க்கலாம்

## டக்ளஸ் தெரிவிப்பு



தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களுக்கு நேற்று (புதன்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

உங்களின் உணர்வுகளையும் அதில் இருக்கின்ற நியாயங்களையும் நாங்கள் புரிந்துகொள்ளுகின்றோம். அதற்கு மதிப்பளிக்கின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசெளகரியங்கள் களையப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

ஆனால் எத்தகைய பிரச்சினைகளையும் வன்முறைகளுக்கூடாகத் தீர்க்க முடியாது என்பதை நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றவர்கள் நாம்.

இதன்காரணமாக புலிகள் எம்மில் பலரை கொலை செய்திருக்கின்றார்கள். என்னை கொலை செய்வதற்கு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். எனினும் தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பதை உறுதியுடன் தெரிவித்து வந்துள்ளோம்.

அதனடிப்படையிலேயே எமது அரசியல் செயற்பாடுகளும், தென்னிலங்கை மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனான எமது உறவும் இருந்து வருகின்றது.

இந்த அணுகுமுறையையே உங்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வன்முறைகள் ஊடாக எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

எனவே, எமக்கிடையில் இருக்கின்ற அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால், கலந்துரையாடல்களை மேற்கொண்டு எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வைக் காண்போம். எமது எதிர்காலத்தையும் எமது தாய்நாட்டையும் பாதுகாப்போம் – என்றுள்ளது.

# பொதுத்தேர்தல் இடம்பெறும் வரை இடைக்கால அரசை ஏற்கத் தயார்!

## அநுரவும் திட்டவட்டம்



பொதுத்தேர்தல் இடம்பெறும் வரை தேசிய மக்கள் சக்தி தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை பொறுப்பேற்கத் தயார் என அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசியமக்கள்சக்தியின்விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போதே கட்சியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரை நாட்டில் ஸ்திரத்தன்மை நிலவாது என்றும் அவர் பதவி விலக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'கோட்டா கோ கம' போராட்டத்தை தவிர்த்து ஏனைய பகுதிகளில் இடம்பெறும் வன்முறை, கொள்ளை மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல் தொடர்பாகத் துரித தீர்மானத்தை முன்னெடுக்காவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும் நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டயோசனைகளை நாடாளுமன்றில் முன்வைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை நிவர்த்தி செய்ய தேசிய மக்கள் சக்தி பின்வரும் பிரச்சினைகள் தொடர்பான தீர்மானத்தை முன்வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி –

1. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

2. தற்போது அமைச்சர் இல்லாத பட்சத்தில், சபாநாயகர் செயல் தலைவராக செயற்படுவார்.

3. தற்போதைய அரசாங்கமும் தற்போதைய நாடாளுமன்றத்தின் அமைப்பும் மக்கள் ஆணையை பிரதிநிதித்துவப்படுத்தாது என்பதால் தற்போதைய நாடாளுமன்றத்தில் எந்த மாற்றத்தையும் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதால் புதிய ஆணையுடன் ஆறு மாதங்களுக்குள் புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

4. இதற்கிடையில் தற்காலிக ஆட்சி அமைப்பாக உடனடியாக தேர்தலுக்கு செல்ல முடியாத பட்சத்தில் நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்லும் பொறுப்பை ஏற்க தேசிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. – என்று தெரிவித்தார்.

# அரசின் பங்காளி அந்தஸ்தில் இருந்து நாம் விலகுகின்றோம்!

## முபாறக் அப்துல் மஜீத் பகிரங்க அறிவிப்பு

எமது கட்சி பொதுஜன பெரமுனவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் என்பதை மீண்டும் நாட்டு மக்களுக்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி அறிவித்துக்கொள்கிறது என அந்தக் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

மஹிந்த ராஜபக்ஷ நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளவராக இருந்த போதும் தனது அருகில் கள்வர்களையும், கொள்ளையர்களையும் வைத்துக்கொண்டிருந்ததால் நாடு அதள பாதாளத்தில் விழுந்து விட்டது.

கடந்த நல்லாட்சி என்பது முஸ்லிம்களின் 99 வீத வாக்கினால் வந்தும் முஸ்லிம் சமூகத்துக்கு அநியாயமே செய்தது. இந்த நிலையில் மஹிந்த தலைமையிலான பெரமுனவுடன் இணையும் படி எமக்கு வந்த அழைப்பை ஏற்று நாம் இணைந்தோம்.

ஆனாலும் ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நாம் முற்றாகக் கைவிடப்பட்டோம். பெரமுனவில் ஒட்டியிருந்த கள்ள முஸ்லிம் தரப்புக்கே முன்னுரிமை கொடுத்தனர். 2019 இற்குப்பின் இன்று வரை பஸில் ராஜபக்ஷ எம்மோடு எந்த சந்திப்பையும் மேற்கொள்ளவில்லை என்பதுடன் நாம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஓர் அம்சம் கூட நிறைவேற்றப்படவில்லை.

அது மட்டுமன்றி முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நாட்டின் பிரச்சினைகள் பற்றி பல கடிதங்கள் அனுப்பினோம். அவை உதாசீனம் செய்யப்பட்டதோடு நாட்டைக் கொள்ளையடிப்பதிலேயே ஈடுபட்டார்கள்.

ஆனாலும் நாம் பொறுமை காத்தோம். எடுத்தோம் கவிழ்த்தோம் என முடிவெடுத்து தொப்பி பிரட்டி என்ற அவப் பெயர் நம் சமூகத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தோம். இப்போது முழு நாடும் இவர்களைப்பற்றி தெரிந்திருப்பதால் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்து ராஜபக்ஷ கூட்டிலிருந்து விலகி விட்டோம். – என்று தெரிவித்துள்ளார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



09 மே மாதம் 2022 மஹிந்த தனது பிரதமர்பதவியைவிட்டுவிலகி அதனைக் கையளிப்பார் என்ற எதிர்பார்ப்புகள் இருந்த போது அவர் செய்த காரியங்கள், அந்த உந்துதல்களால் பின் நடந்த சின்னத்தனங்கள், அரசின் பாதுகாப்புப் படையினரின் கண்டுகொள்ளாமை அல்லது பக்கச் சார்பால் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டு, அங்கிருந்தவை எரிக்கப்பட்டு, காலிமுகத்திடல் காலியாக்கப்பட்டது.

மே மாதம் 2009 இல் முள்ளிவாய்க்கால் கொடூரம் அரங்கேறியது. ஆனால் முள்ளிவாய்க்கால் அத்தோடு முடிந்து போகவில்லை. அதன் அதிர்வுகள் தொடர்கின்றன. அதுபோல இன்றைக்கும் எழுந்த காலிமுகத்திடல் போராட்டங்களும் ஓய்ந்து விடப்போவதில்லை. முள்ளிவாய்க்காலில் மக்கள் கேட்ட நீதிக்கு தரப்பட்ட உன்மத்தங்கள் போலவே இங்கும் நடந்தன. அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்ட மக்கள் மீது ஆளும் கட்சி உறுப்பினர்களும், அவர்களது காடையர்களும், குண்டர்களும் மேற்கொண்ட கொலைவெறித் தாக்குதல்கள் சர்வமத தலைவர்களாலும் சர்வதேச தலைவர்களாலும் மட்டுமல்ல, நேரிய, சீரிய சிந்தனை கொண்ட யாபேராலும் கண்டிக்கப்படுகின்றது. அவை பேரறைகளாக, இடி முழக்கங்களாக எதிரொலிக்கின்றன. தங்களது அரசியல் ஆதாயங்களுக்காக உணர்ச்சி நிறைந்த சிங்கள மக்களை சாராய போத்தல்களும், சோற்றுப் பார்சல்களும், சிறிது பணமும், மேலும் கிடைப்பது உங்களது தேடலே எனத் தூண்டி அழிப்பதும், அடிப்பதும், எரிப்பதும் அவர்களது பண்பியல்பாகவே வளர்ந்தது.

தமிழ் சத்தியாக்கிரகிகள் காலிமுகத்திடலில் தாக்கப்பட்டு பேர வாவியில் தூக்கி வீசப்பட்டமை, ஸ்ரீமாவோ காலத்தின் வன்முறைகள் அவரது விசுவாசிகளால் நடத்தப்பட்டமை, ஜே.ஆரோடு அவரது சகாக்கள் யாழ் பொது நூலகத்தை எரித்துத் தொடர்ந்து நடத்திய 1983 கலவரங்கள், பிரேமதாஸ அதே பாணியில் தொழிற்சங்கங்களை அடித்து நொறுக்கியமை, சந்திரிகாவின் காலங்கள், பின்னர் மஹிந்த அதனைத் தொடர்ந்தமை என எல்லாம் அப்படியான வெள்ளப் பெருக்குகளே.

அந்த சாராயத்தின் கம்பீரம் அடங்கியது போலவே, அரசியல் ஆதாயங்கள் நடந்தவற்றை நினைவுகளாகவே விட்டுவிடும்.

ஆனால் இம்முறை மஹிந்தவின் கணக்கு பெரும் தப்புக் கணக்காகவே முடிந்தது. அவரும் அவரது குடும்பமும் நடத்திய ஊழல் ஆட்சியில் மக்கள் வெறுப்படைந்து இருந்தார்கள். அவை முன்னைய அரசியல்வாதிகள் நடத்தியவை போல் மக்கள் பெரிதாக கணக்கெடுக்காதவை அல்ல. இவை பாரிய ஊழல்கள். நாட்டையே வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவை. மக்கள் பட்டினியாலும் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்ய முடியாமலும் கொதிப்படைந்து இருக்கிறார்கள் என்பதை புரிந்தும், சாராயத்துக்குப் பதிலாக தாராளமாக விஸ்கிப் போத்தல்களைத் தந்து, பணமும் பிரியாணியும் கொடுத்து, ஏவி விட்டமை, 'பொறுத்தது போதும் பொங்கி எழு மனோகரா!' என்ற கண்ணாம்பாவின் ஆவேசவார்த்தைகள் போல, போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக பொதுமக்களைக் கொதித்தெழச் செய்தது. அதனால் குவிந்தார்கள். திரண்டார்கள். துவம்சம் செய்யப் புறப்பட்டார்கள். முன்னைய நாள்கள் போல இந்தப் பசியும், பட்டினியும், ஊழல்களும், நாடு இருந்து, போகின்ற நிலையும், அவர்களின் அடாவடித்தனங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டிய பயத்தை அவர்களுக்குத் தரவில்லை. நியாயமற்ற ஒரு போராட்டம் ஒரு நியாயமான சமுதாயத்தை உருவாக்கப் போவதில்லை. அவர்கள் ஒரு நியாயமான போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுத்தார்கள். குண்டர்கள் குண்டர்கள்தான். அவர்களது கைகளும் கால்களும் அவரவர்களது சொந்த மூளையிலோ இதயத்தின் அடிப்படையிலோ செயல்படுவதில்லை. அப்படியானவர்களை இந்த நியாயமான போராட்டத் தேன்கூட்டில் எறிந்தபோது தேன் குளவிகளும் தேடித்தேடிக் கொட்டுகின்றன.

முள்ளிவாய்க்காலில் மக்கள் மௌனிக்கப்பட்ட போதும், அதனைத் தொடர்ந்து எஞ்சியவர்கள் தங்களது அவலங்களுடன் வெளியேறியபோது, பயங்கரவாதத்தை ஒழித்த யுத்தம் நியாயமானது என்ற கோசங்களும், முனகல்களும், பட்டயங்களும், சாமரங்களும் மஹிந்தவுக்கும் கோத்தாவுக்கு வீசப்பட்டன. மீளாத் துயில் கொண்டு நினைவாலயங்களில் உறங்கிக் கிடந்த மாவீரர்களின் நினைவுத் தூபிகளை, கல்லறைகளை உடைத்து, ஆயுதங்களுக்காகவும், புதையல்களுக்காகவும் தோண்டிய பின்னர், அவற்றின் மேல் முகாம்கள் அமைத்தமையும், பிரபாகரன் கொல்லப்பட்ட பின் அவரது பிறந்த வீடு நினைவாலயமாவதையும், அதை சிங்கள மக்களை வந்து பார்ப்பதையும் விரும்பாமல் இடித்தழித்தமையும், சரணடைந்தவர்கள் காணாமல் போனமையும், அவர்களைத் தேடி உறவுகள் அலைவதையும், அவர்கள் பக்கத்தில் இருந்த நியாயங்களையும், அறங்களையும் பௌத்தம் கண்டு கொள்ளவில்லை. இந்தப் பேரினவாத போக்கில்தான் மஹிந்த தனது திமிரை வளர்த்தார். பிரபாகரனையும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்தேன் என்பதால் நடத்திய தர்பார் எல்லாவற்றையுமே மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், கேள்விகளுக்கு உட்படுத்தக் கூடாது என்ற அளவுக்கு மீறி ஆணவ மிடுக்கு வளர்ந்தது.

என்றும் இருந்த அறம், சில காலம் சூது மறைத்திருந்தாலும், இன்று காலச் சக்கரத்தில் கர்மம் தன் பணியைச் செய்கிறது.

புலம்பெயர் ஊடகங்களும், முக்கியமாக முக நூல் பக்கங்களும் மஹிந்தவுக்கு சிங்கள மக்கள் கொடுத்த எதிர்வினைகள், அவர் தமிழ் மக்களுக்கு – முக்கியமாகப் பிரபாகரனுக்கும் அவரது குடும்பத்துக்கும் – செய்த அட்டூழியங்களுக்கான பரிசே என்று சிலாகித்து விமர்சிக்கின்றன. அவற்றில் அவர்களுக்கு ஒரு திருப்தி இருக்குமாயினும், அந்த உணர்வுகள் மாத்திரம் இவற்றுக்குக் காரணிகள் என நினைத்து, தமிழ் மக்கள் தாங்கள் வெற்றியீட்டி விட்டோம், சிங்களப் பெரும்பான்மையை நிலைகுலைய வைத்தாயிற்று என்று இறுமாப்புக் கொண்டால் அது மிகவும் அபத்தமானது. தப்பிதமானது.

ஒரு ட்விட்டர் செய்தியில் "ராஜபக்ஷா! தமிழீழத்தைப் பிரகடனப்படுத்து! நாங்கள் உங்களை போர்க்குற்றங்களில் இருந்தும் நீங்கள் நடத்திய மற்றைய அட்டூழியங்களில் இருந்தும் – முக்கியமாக 2009 இல் செய்தவற்றிலிருந்து – பாதுகாப்போம்" என்று சொல்லப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணைகள் ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸிலினால் முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும் அவற்றில் ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதோ அல்லது குற்றவாளிகளாகக் காண்பதோ தமிழ் மக்கள் கைகளில் மட்டும் தங்கி இருக்கவில்லை என்பதையும் புவியியல் அரசியல் நியதிகளாகத் தமிழ் மக்கள் உணர்ந்து இங்கிருந்து தாயக் கட்டைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

ராஜபக்ஷகளை நன்கு அறிந்தவர்கள், அவர்களுடன் அன்னியோன்னியமாக இயங்கியவர்கள், ராஜபக்ஷக்கள் அவ்வளவு இலகுவில் தங்களது அதிகாரங்களை விட்டுக்கொடுக்கப் போவதில்லை, எந்த வழிகள், எவ்வளவு கீழ்தரமானாலும் அவற்றைப் பாவித்து அதிகாரத்தைத் தம் பக்கம் வைத்திருக்க முயற்சித்தே தீருவார்களை என்கிறார்கள்.

ஒருபுறத்தில் போராட்டக்காரர்கள் உண்மையில் இந்த எரிப்புகளை நடத்தவில்லை, கோட்டாவின் இராணுவமே இவற்றை நடத்தி இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கிறது என்ற ஊகங்கள். அதற்கு ஆதரவு தருவது போல பாதுகாப்பு என்ற பெயரால் கொழும்பு தற்சமயம் இரும்புப்பிடிகளுடன் இராணுவத்தின் அதிகாரத்தில் உள்ளது. 'கோட்டா கோ கம' போராளிகளுக்கு உணவு கொண்டு வந்து தருவதற்குக் கூட அனுமதி கொடுக்கப்படவில்லை. முள்ளிவாய்க்கால் மாதிரி பட்டினியால் பணிய வைக்கலாம் என்ற திட்டங்கள் இருக்கலாம்.

நீர்கொழும்பில் சிங்களவர் – முஸ்லிம்கள் கலகங்கள் தென்படுகின்றன. இவை வளர்க்கப்படலாம். இடையே ஜே.வி.பியின் பழைய அங்கத்தினராக இருந்து, பின் வெளியேறி ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த பிரேம்குமார் குணரட்ணம் என்பவர் தற்போது தென்னிலங்கைக்குள் ஊடுருவி முன்னிலை சோ–லிஸ கட்சி நடத்துகிறார் எனவும், அவர் ஜே.வி.பிக்கு முரண்பட்டுச் செயல்படுகிறார், ராஜபக்ஷ அரசை வெளியேற்ற மும்முரமாக உழைக்கிறார் என்ற விவரங்களும் அவர்களது விசுவாசிகளிடமும் விதைக்கப்படுகின்றன.

இவை, தமிழ் மக்கள் அவரது இடதுசாரிக் கொள்கைகளுக்கு பெரும்பாலான ஆதரவாக இல்லாவிட்டாலும், அரசியல் ஆதாயங்களுக்காக, இன ரீதியாகத் திருப்பப்படலாம் என விழிப்புடன் இருந்து, தமிழ் மக்கள் தற்சமயம் சம்பவங்களைச் சாதுரியமாக அணுக வேண்டும்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# பேராசிரியர் பாலகுமாரின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு

## அவரது 31 ஆவது நாள் நினைவு இன்று



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் மருத்துவ பீடத்திற்கும் உயிரியில் இரசாயனவியல்துறைக்கும்உரிமையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய நேர்மையான ஓர் கல்வியியலாளரான பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார் அவர்களைநாம் இன்று இழந்து விட்டோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ விஞ்ஞான பீடத்தின் பட்டதாரியான இவர் மருத்துவ பீட உயிர் இரசாயனவியல் துறையில் முதுதத்துவமாணி பட்டதாரி மாணவனாக தனது பயணத்தை ஆரம்பித்து, பின்னர் விரிவுரையாளராக, பேராசிரியராக மட்டுமன்றி மருத்துவ பீடாதிபதியாகவும் உச்ச நிலையடைந்து, தனது கற்றல் மற்றும் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாது ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணிகளுடன் மாணவர்களுக்கும் எமது சமூகத்திற்கும் பல்பரிமாணங்களில் அளப்பரிய பணிகளையும் ஆற்றியவர்.

பேராசிரியர் பாலகுமார் 36 வருடங்கள் எமது துறையினதும் பீடத்தினதும் ஒட்டுமொத்த பல்கலைக்கழகத்தினதும் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளில் தனது பங்களிப்பைவழங்கியுள்ளார். பாலாவின் பெயர் எல்லோர் மனதிலும் நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டது.

**பல்கலைக்கழகத்தில் பாலாவின் பிரசன்னம்:-**

முன்னாள் பீடாதிபதியும் உயிர் இரசாயனவியல் பேராசிரியருமான காலம் சென்ற பேராசியர் பாலசுப்பிரமணியத்துடனும் என்னுடனும் இணைந்து பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்ட பாலா நாட்டின் சூழ்நிலை மற்றும் அவரது குடும்ப கடமைகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் தங்க முடிவெடுத்து தனது கலாநிதிப்பட்ட ஆய்வினை எமது பல்கலைக் கழகத்திலேயே மிகவும் சிறந்த முறையில் பூர்த்தி செய்தார். பல்வேறு இக்கட்டான மற்றும் சவால் நிறைந்த காலப்பகுதிகளில் பணியாற்றுவதற்கு பொருத்தமான புத்திசாலித்தனமான மென்திறன் கொண்ட ஒரு கல்வியியலாளராக தன்னை உருவாக்கி உலகம் அறிந்த ஓர் ஆய்வாளராக தன்னை வெளிப்படுத்தியமையுடன் அதில் வெற்றியும் கண்டுள்ள பாலா 2019 இலிருந்து பேராசிரியராகவும் தனது தகமையை உயர்த்திக் கொண்டார்.

**சிறந்த விரிவுரையாளராக:-**

பாலா இப்பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவர்களுக்கு மட்டுமன்றி இணைந்த சுகாதார அலகு சித்த மருத்துவ கலைப்பீடத்தில் மனைப்பொருளியல்;, விவசாய பீடத்தில் விவசாய இரசாயனவியல், சிறப்பு உடற்கல்வி எனப் பல தரப்பட்ட மாணவர்களுக்குக் கற்பித்தல் பணிகளை ஆற்றி வந்தமையுடன் பல்வேறு தொழில்நுட்ப ரீதியான தேர்வுக் குழுக்களில் முக்கிய பதவிகளை வகித்து அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பல்கலைக்கழகத்தின் தரத்திலும் அக்கறையுடன் தனது பணிகளை ஆற்றி வந்துள்ளார். உண்மைகளை எப்போதும் வெளிக்கொணர்வதில் முன்னிற்பவர். இதனால் பலரது கோபங்களுக்கும் உள்ளாகி பல துன்பங்களையும் அனுபவித்துள்ளார்.

**சிறந்த ஆய்வாளராக:-**

இவற்றுக்கு மேலாக இவர் ஒரு சிறந்த ஆராய்சியாளராக இருந்துள்ளார். இவர் 45 இற்கு மேற்பட்ட முழு ஆய்வுக்கட்டுரைகளையும் 175 இற்கு மேற்பட்ட மாநாட்டு ஆய்வு அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளமையுடன் 5 முதுதத்துவமாணி மாணவர்களுக்கு மேற்பார்வையாளராகவும் பணியாற்யுள்ளார். ஹியூஸீ மற்றும் ஹிறீய் போன்றவற்றிலிருந்து ஆராய்ச்சி நிதியைப் பெற்று தனது ஆய்வுப்பணிகளை மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டு (JUICE - 2018) தலைவராக இருந்து தனது அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ளார். பல ஆய்வு மாநாடுகள் மற்றும் ஆய்வேடுகளின் மதிப்பீட்டாளரகாவும் வளவாளராகவும் பணியாற்றியுள்ளமையுடன் ஜனாதிபதி ஆராய்ச்சி விருதையும் பெற்றுக்கொண்ட ஒரு சிறந்த ஆராய்ச்சியாளனாகவும் பாலா தன்னை நிரூபித்திருந்தார்.

**சிறந்த நிர்வாகியாக:-**

2003இல் உயிர் இரசாயனவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக உள்நுழைந்த பாலா 2005 இல் இருந்து இறக்கும் வரை துறையின் துறைத் தலைவராக பணியாற்றியமையுடன் 2012 இல் மருத்துவ பீடத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு 2012 தொடக்கம் 2015 வரை பீடாதிபதியாகப் பணியாற்றினார். தொடர்ந்து இரண்டாவது தடவையும் அவரைப் பீடாதிபதியாக கொண்டு வர பீடம் விரும்பிய போதும் பாலா பிறிதொருவரைப் பீடாதிபதியாக தானே முன்மொழிந்து அவரையே பீடாதிபதியாக வருவதற்கு உறுதுணையாக நின்ற ஓர் உத்தமர் ஆவார். இவற்றுக்கு மேலாக இணைந்த சுகாதார அலகின் கல்வி நிர்வாக ஒருங்கிணைப்பாளராக, முன் மருத்துவ ஒருங்கிணைப்பாளராக, சித்த மருத்துவ பிரிவின் முகாமைத்துவ சபையின் உறுப்பினராக, மருத்துவ அறிவியல் படிப்பு வாரியத்தின் தலைவராகவும், பணியாற்றியுள்ளளர். மேலும் உயர்பட்ட படிப்பகள் பீடத்தின் உறுப்பினராகவும், ஆயுட்கால விஞ்ஞான சபை உறுப்பினராகவும் பல நிலைகளில் பணியாற்றியுள்ளார்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் இளமாணி மாணவர்களின் தரத்தை மேம்படுத்துதல் (IRQUE) திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த மருத்துவப் படிப்புத்திட்டத்தின் தர மேம்பாட்டு நிதியின் (QEF) ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட போது பாலாகொள்முதலில்தனதுநிபுணத்துவத்தைப் பெற்றார். இதனூடாக 100 மில்லியன் ரூபாவை முழுமையாகப் பயன்படுத்தி 54 இருக்கைகள் கொண்ட சொகுசு பேருந்து மற்றும் 12 இருக்கைகள் கொண்ட வான் ஒன்றையும் கொள்வனவு செய்ய முடிந்தது. இது தொடர்பான கூட்டங்களுக்கு ஏ9 வீதி மூடப்பட்டிருந்த போது சொந்த பணத்தில் பிரயாணம் செய்து கொழும்பு சென்று வந்து அதில் வெற்றியும் கண்டார். இத்தகைய பாலாவின் அர்ப்பணிப்பும் உறுதியும் மருத்துவ பீடத்திற்கு பல உயர்தர உபகரணங்களைப் பெறுவதற்கும் பல்வேறு துறைகளைப் பதுப்பிப்பதற்கும் திறன் ஆய்வகத்தை மேம்படுத்தவும் பேருந்திற்கான தரிப்பிடம், மினி ஜிம்னாசியம் என்பன மருத்துவ பீட மாணவர்களுக்கு கிடைப்பதற்கும் உதவியது. நான் துணைவேந்தராக இருந்த போது அவரது அறிவுத்திறனையும் நிபுணத்துவ ஆற்றலையும் வெளிக்கொணர முடிந்தது. அப்போதிருந்து அவர் கற்பித்தல் உபகரணங்கள் தொடக்கம் வாகனங்கள் மற்றும் பணியாளர்களின் சீருடை வரையான கொள்வனவு தீர்மானம், மற்றும் தொழில் நுட்ப மதிப்பீட்டு தர நிர்ணயம் தொடர்பான பல மதிப்பீட்டுக் குழுக்களில் முக்கிய பதவிகளில் இருந்து வந்தமையுடன் தற்போதைய துணைவேந்தர் இக்குழுக்களின் தலைவராகபாலாவையேநியமித்து இருந்தமையால் பாலா இறக்கும் வரை மேற்படி பணிகளைசிறப்பாகமேற்கொண்டுவந்துள்ளார்.

மருத்துவ பீடத்தில் பாலா திட்ட கண்காணிப்பு குழுவின் தலைவராகப் பணியாற்றி வந்தார். ஆராய்ச்சி மற்றும் அது தொடர்பான பல நிர்வாக பணிகளில் தனது பணிகளை செவ்வனே ஆற்றி வந்துள்ளார். இவை தவிர மாணவ ஆலோசகராக, விளையாட்டு ஆலோசனைக் குழு உறுப்பினராக மட்டுமன்றி மாணவர்களுக்கு பல்வேறு வழிகளில் பல உதவிகளை வழங்கியுள்ளார்.

**பௌதீக வளங்களை பெறுவதில் வெற்றி கண்டவர்:-**

பாலா பீடாதிபதியாக இருந்த காலத்தில் மருத்துவபீடத்தில் அமைக்கப்பட்டு உள்ளக வேலைகள் முடிவுறாமல் இருந்த கூவர் கலையரங்கினை முற்றுப்பெற வைத்தார். பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஆதரவுடன் மருத்துவ பீடத்துக்கு அண்மையிலிருந்த காணியையும் மற்றும் மருத்துவ பீட பழைய மாணவர்களின் ஆதரவுடன் மருத்துவ மாணவர்களுக்கான விடுதி வசதிகளை விரிவுபடுத்துவதற்காக மருத்துவ விடுதிக்கு பக்கத்து நிலத்தையும் கொள்வனவு செயவதில் வெற்றி கண்டார். மருத்துவ பீட Clinical Departments இன் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் எட்டு மாடி மருத்துவ வசதிகளுடான கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக யாழ்ப்பாண நகரின் மையத்தில் போதானா வைத்தியசாலைக்கு அருகில் மாநகர சபையின் நன்கொடையாகக் காணியைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டார். மேற்படி காணியைப் பெற்றுக் கொள்ள பேராசிரியர் முகுந்தன் மற்றும் பேராசிரியர் குமணன் ஆகியோருடன் அமைச்சரிடம் மேற்கொண்ட பயணங்களின் அனுபவம் பற்றியும் யாழ் மேயரின் பங்களிப்புப் பற்றியும் மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரது ஆதரவையும் பெற்ற தனது அனுபவங்களை என்னிடம் பாலா பகிர்ந்துள்ளார். 2014 இல் உயர்கல்வி அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டது. யாழ் மாநகரசபை வசம் இருந்த காணியினை யாழ் பல்கலைக் கழகம் வசம் மாற்றுவது தொடர்பான வர்த்மானிஅறிவித்தலைப்பெறுவதற்கும் பாலா கடுமையாக உழைத்துள்ளார். மேலும் Clinical Departmentsகட்டட நிர்மாணத் திட்டத்திற்கான அமைச்சின் அனுமதியைப் பெறுவதில்வெற்றி கண்டார்.

தொடர்ந்து கைதடியில் பிரதான வீதியில் உள்ள நிலத்தை சித்த மருத்தவ பிரிவுக்கு வாங்குவதற்றுகும் பாலா உதவியிருந்தார்.

**இயற்கையை ரசிக்கும் பாலா:-**

முன்னாள் மருத்தவ பீட பீடாதிபதியும் உயிர் இரசாயனவியல் துறையின் பேராசிரியருமான பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு பிறகு சுற்றுப்புறத்தை அழகுபடுத்துதலுக்கு பாலாவினால் முன்னுரிமை அளிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக எமது பீடத்தின் முன்முற்றத்தில் உள்ள அவுஸ்திரேலிய புல்லைத் தேர்ந்தெடுத்து வாங்குவதற்கு பாலா மேற்கொண்ட பயணங்கள் இன்னமும் என் நினைவில் உள்ளன.

**மாணவர்களின் நலன் மேல் அக்கறைகொண்ட பாலா:-**

ஆதரவற்ற மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவி செய்ய பாலா எப்போதும் ஆர்வமாகவும் தயாராகவும் இருந்தார். நன்கொடையாளர்களை அடையாளங்டகண்டு மாணவர்களுக்கு உதவி வந்தார். மாணவ ஆலோசகராக பணியாற்றினாலும் கல்வியின் தரத்தில் கருணை மற்றும் அனுதாபத்தை அவர் ஒரு போதும் காட்டி சமரசம் செய்யவில்லை என்பது அவரது தனிச்சிறப்பாகும்.

**தேசிய மற்றும் பிராந்திய ரிதியிலுமான பங்களிப்பு:-**

பாலா கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ முதுமாணி நிறுவகத்தின் உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அடிப்படை மற்றும் மருத்துவ அறிவியல் சபையின் உறுப்பினர், உத்தியோக பூர்வ மொழிகளின் கொள்கை மற்றும் சகவாழ்வு பற்றிய மரபுவழி பட்டறை உறுப்பினர், யாழ்ப்பாணம் சுன்னாகம் கழிவு எண்ணெய் கசிவு காரணமாக நிலத்தடி நீர் மாசு தொடர்பான பகுப்பாய்வ உறுப்பினர், இலங்கை அங்கீகார சபையில் அடையாளங்காணப்படாத ஏட்டியோலஜின் நீண்டகால சிறுநீரக நோயைத் தணிக்கம் இலங்கை அங்கீகார சபையின் உறுப்பினர், திக்கம்வடிசாலையின்கொள்முதல் குழுவின்ஆலோசகர்மற்றும்யாழ்ப்பாண பனை அபிவிருத்தி சபை உறுப்பினர், யாழ்பாண விஞ்ஞான சங்கம், ஆசிரியர் சங்கம், மற்றும் ஆலய திருப்பணிகள் என பல வழிகளில் எமது சமூகத்திற்கும் ஒட்டு மொத்த நாட்டிற்கும் தன்னால் இயன்ற பங்களிப்புக்களை மிகவும் மன நிறைவுடன் வழங்கியுள்ளார்.

**பாலா ஓர் கலாச்சாரம் மற்றும் விளையாட்டு பிரியர் ஆவார்:-**

பாலா பீட ரீதியாகவும் பல்கலைக்கழக ரீதியாகவும் மற்றும் பொது இடங்களிலும் சரி நடைபெறும் பல்வேறு கலாச்சார நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு கொண்டு ரசிகராக இருந்து தான் மகிழ்ந்தமையுடன் கலைஞர்களையும் விளையாட்டு வீரர்களையும் ஊக்குவிப்பதில் அவருக்கு நிகர் அவரே. அனைத்து விளையாட்டு நடவடிக்கைகளிலும் ஆழமான அறிவைக் கொண்டிருந்தார்.

**முடிவாக:-**

பாலாவின் மகிழ்சியான முகத்தையும் எல்லோரிடமும் அவர் கொண்டிருந்த அன்பையும் அக்கறையையும் சிறு வினாடிகள் மட்டும் நீடிக்கும் கோபத் தையும் துறையின் வளர்ச்சிக்கு அவர் வழங்கிய புதிய யோசனைகளையும் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் துறையை நவீனமயமாக்கும் ஆர்வத் தையும் தன்னகத்தே கொண்டிருந்த பாலாவை இழந்து விட்டோம். பாலாவின் கனவும் விருப்பமுமான Cold Room அமைத்தல் நிறைவேறும் என்றும் பாலாவின் அளப்பரிய முயற்சியால் கிடைத்த Clinical Departments கட்டடத்திற்கு பாலாவின் பெயரைச் சூட்ட பல்கலைக்கழகம் ஆவன செய்யும் என்றும் உறுதியாக நம்புகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதும் மருத்துவபீடத்தினதும் உயிர் இரசாயனவியல் துறையினதும் அவரது குடும்பத்தினரதும் பாலாவின் இழப்பால் ஏற்பட்ட வெற்றிடம்ஈடுசெய்யப்படமுடியாத ஒன்றாகவே உள்ளது. இறுதியாக பாலாவின் ஆத்மா சாந்தியடைந்து எல்லாம் வல்ல பிள்ளையாரின் திருப்பாதங்களில் அமைதிபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**- பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் -**
(சிரேஷ்ட பேராசிரியர், உயிர் இரசாயனவியல் துறை, மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்;
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்;
பல்கலைக்கழகை மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்)